உ

சிவமயம்.

ஓம் தத் சத்

கிருஷ்ணாய பரப்பிரஹ்மணே நம:

भगवद्गीता १५ पुरुषोत्तम योगः

கீதை 15வது புருஷோத்தம யோகம்.

கீதை 15-வது பிரபஞ்ச அத்தியாய மூலமும்.

சம்ஸ்கிருத பதமும், தமிழ் உரையும்,
தமிழ்க் கவியும், உரையும்,
மூர்க்க சதகம் மூலமும்,
சம்ஸ்கிருதப் பதமும், தமிழ் உரையும்.

இவை

மண்டலேசுவரரும், பர சமய கோளரியாரும்,
உபய பாஷா வேதாந்த பிரவர்த்தகாச்சாரியரும்,
ஷா பண்டித மணியும் (மும் மொழிப் புலமை ரத்நமும்),
சாஸ்திர கர்த்தரும் (நூறு நூல் இயற்றியவரும்),
திருக் களர், கோவி லூர் மடம்,
ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிக ளவர்கள்
மாணாக்கரும்,
திருப் பூ வணம் வேதாந்த மட ஸ்தாபகரும்
ஆகிய,
காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள் அவர்கள்
இயற்றி,

மதுரை, ராஜேசுவரி பிரசில்,
பதிப்பிக்கப்பட்டன.

ரைட்] 1951. [விலை அணா எட்டு.

பகவற் கீதை பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
17	19	இயைந்தாற்	இயைந்தால்

மூர்க்க சதகம் பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
28	17	स्वश्लोघी	स्वश्लाघी
29	,,	निर्बुद्धः	निर्बुद्धिः
30	5	स्थविर	स्थविरः
,,	24	अनुशायी	अनुशयी

உ

சிவமயம்.

பூமிகை.

ஸ்ரீ வியாச பகவான் நூறாயிரம் கிரந்தத்தில் பாரதத்தினை யியற்றினர். அதன்கண் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜ்ஜுநனுக்கு ஆத்ம சொரூபத்தினை அநுக்கிரகித்த பகவத் கீதையினை, 700 சுலோக ரூப மாக வைத்தனர். அது சேம னூர் பட்டரவர்களால் தமிழில் **545** செய்யுள் ரூப மாக மொழி பெயர்க்கப்பட்டது. இக் கீதையின் பெருமை, "எவன் கோர மான ஜநந மரண ரூப சம்சார சமுத்திரத்தினைத் தாண்ட விச்சிக்கின்றனனோ, அவன் கீதை யாகிய தோணியின் மீது ஏறி அநாயாச மாக அதன் கரையினை அடைவன்.", "புருஷர்களுக்குத் திநந் தோறும் ஸ்நாநம் தேகத்தின் அழுக்கைப் போக்கக் காரண மாம். ஒரு முறை கீதா சாஸ்திரம் ஆகின்ற ஜலத்தின் ஸ்நாநம், ஜநந மரண ரூப சம்சார மலத்தினை நாசஞ் செய்கின்றது.", "எவ் விடத்தில் கீதையி னுடைய விசாரமும், படித்தலும், படிப்பித்தலும், நடக்கின்றதோ, அந்த இடத்தில் நான் எப்போதும் வசிக்கிறேன்." என்று, பல பிரகார மாக வராக புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

இதனைப் பிரதி திநமும், பாராயணஞ் செய்யாத மநுடரே இருக்கமாட்டார்கள்; இதனானே, இதன் பெருமை தெளி வாகப் புலப்படுகின்றது. "இதன் ஒவ் வொரு அத்தியாயத்தினை நாடோறும் பாராயணஞ் செய்யினும், பக்தியுடன் நித்தியம் ஓர் அத்தியாயத்தினைப் படிக்கினும், அவன் ருத்ர லோகத்தினை அடைந்து சிவ கண மாகி நெடு நாள் வசிப்பன்." என அதிகப் பலன் கேட்கப்படுகின்றது.

வட தேயத்தில், இதன், " புருஷோத்தம யோகம். " என்னும், 15-வது அத்தியாயத்தினைப் பரமஹம்ச சந்யாசிகள், போஜநத்துக்கு உட்காரும் சமயம் பாராயணஞ் செய்து, 4-வது அத்தியாயம் 24-வது சுலோகத்தின் பொருளினை யுடைய சரமோபநிஷத் 26-வது மந்திரம் ஆன, **ब्रह्मार्पणं ब्रह्महविः ब्रह्माग्नौ ब्रह्मणाहुतम् । ब्रह्मैव तेन गन्तव्यम् ब्रह्म कर्म समाधिना ॥** என்னும் சுலோகத்தினை ஸ்மரித்து, பிரஹ்மார்ப்பணம் செய்து புஜிக்கின்றனர்.

அது போலவே, தென் தேயத்தில், கோவிலூர் மடத்தின் வழி வந்த பரமஹம்ச சந்யாசிகளும், வித்தியார்த்திகளும், பகவத் வாக்கிய மாகிய சம்ஸ்கிருத வாணி ரூப கீதையினையும், தமிழ் வாணி ரூப கீதையினையும், போஜநத்திற்கு உட்காரும் சமயம் (15-வது அத்தியாயத்தினை) பாராயணஞ் செய்து, புஜிக்கின்றனர்.

" 15-வது அத்தியாயத்தின் அரைச் சுலோகத்தினைப் பாராயணஞ் செய்து கொண்டு இருந்த கௌட தேசத்தில், " சாபேருண்டன் " என்னும் அரசன் மோக்ஷம் அடைந்தான். " என்று, பத்ம புராணங் கூறுவதால், பகவற் கீதையின், சம்ஸ்கிருதத்தில், " புருஷோத்தம யோகம் " என்றும், தமிழில், " பிரபஞ்ச அத்தியாயம் " என்றும் பெய ருடைய, 15-வது அத்தியாயத்தினை மாத்திரம், தேவ நாகரி எழுத்தில், சுலோகம் பதம், பதப் பொருளும், தமிழில், கவியும், உரையும், சேர்த்து அச்சிடின், பாராயணஞ் செய்பவர்கட்கு அநுகூல மாக இருக்கும் என்றும், பொருளை உணர்ந்து பாராயணஞ் செய்வது நன்மை யளிக்கும் என்றும், கருதி இம் முயற்சியில் பிரவேசித்தோம். அன்பர்கள் யாவரும் வாங்கி உணர்ந்து, பாராயணஞ் செய்து, இன்புறுவார்களாக.

காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்,
திருப் பூ வணம்.

निर्गुणाष्टोत्तर शत नामावलि.

நிர்க்குணாஷ்டோத்தர சத நாமாவளி.

१	ॐ अखंडाय	नमः	1	ஓம்	அகண்டாய	நம:
२	,, अकर्त्रे	,,	2	,,	அகர்த்ரே	,,
३	,, अकामाय	,,	3	,,	அகாமாய	,,
४	,, अकारणाय	,,	4	,,	அகாரணாய	,,
५	,, अहेयाय	,,	5	,,	அஹேயாய	,,
६	,, अक्रोधाय	,,	6	,,	அக்ரோதாய	,,
७	,, असंगाय	,,	7	,,	அஸங்காய	,,
८	,, असंसारिणे	,,	8	,,	அஸம்ஸாரிணே	,,
९	,, अशरीरिणे	,,	9	,,	அசரீரிணே	,,
१०	,, अचलाय	,,	10	,,	அசலாய	,,
११	,, अच्युताय	,,	11	,,	அச்யுதாய	,,
१२	,, अक्षराय	,,	12	,,	அக்ஷராய	,,
१३	,, अणवे	,,	13	,,	அணவே	,,
१४	,, अद्वैताय	,,	14	,,	அத்வைதாய	,,
१५	,, अनंताय	,,	15	,,	அநந்தாய	,,
१६	,, अनाद्ये	,,	16	,,	அநாதயே	,,
१७	,, अनादिमुक्ताय	,,	17	,,	அநாதிமுக்தாய	,,
१८	,, अनावृताय	,,	18	,,	அநாவ்ருதாய	,,
१९	,, अनुपादेयाय	,,	19	,,	அநுபாதேயாய	,,
२०	,, अनूतनाय	,,	20	,,	அநூதநாய	,,
२१	,, अनेकरूपाय	,,	21	,,	அநேகரூபாய	,,
२२	,, अभयाय	,,	22	,,	அபயாய	,,
२३	,, अपरिच्छिन्नाय	,,	23	,,	அபரிச்சிந்நாய	,,
२४	,, अपरोक्षाय	,,	24	,,	அபரோக்ஷாய	,,
२५	,, अभेदाय	,,	25	,,	அபேதாய	,,
२६	,, अभोक्त्रे	,,	26	,,	அபோக்த்ரே	,,
२७	,, अप्रमेयाय	,,	27	,,	அப்ரமேயாய	,,

२८	ॐ	अप्रवृत्ताय	नमः	28	ஓம்	அப்ரவ்ருத்தாய	நம:
२९	,,	अप्राणाय	,,	29	,,	அப்ராணாய	,,
३०	,,	अमनसे	,,	30	,,	அமநஸே	,,
३१	,,	अमृताय	,,	31	,,	அமிர்தாய	,,
३२	,,	अलोभाय	,,	32	,,	அலோபாய	,,
३३	,,	अव्याकृताय	,,	33	,,	அவ்யாகிருதாய	,,
३४	,,	आद्ये	,,	34	,,	ஆதயே	,,
३५	,,	आत्मने	,,	35	,,	ஆத்மநே	,,
३६	,,	आनन्दरूपाय	,,	36	,,	ஆநந்தரூபாய	,,
३७	,,	उन्नताय	,,	37	,,	உந்நதாய	,,
३८	,,	एकरूपाय	,,	38	,,	ஏகரூபாய	,,
३९	,,	कारणाय	,,	39	,,	காரணாய	,,
४०	,,	कूटस्थाय	,,	40	,,	கூடஸ்தாய	,,
४१	,,	सत्याय	,,	41	,,	ஸத்யாய	,,
४२	,,	सद्रूपाय	,,	42	,,	ஸத்ரூபாய	,,
४३	,,	शंभवे	,,	43	,,	சம்பவே	,,
४४	,,	सर्वकारणाय	,,	44	,,	ஸர்வகாரணாய	,,
४५	,,	सर्वगताय	,,	45	,,	சர்வகதாய	,,
४६	,,	सर्वसमाय	,,	46	,,	ஸர்வஸமாய	,,
४७	,,	सर्वज्ञाय	,,	47	,,	ஸர்வக்ஞாய	,,
४८	,,	सर्वतोमुखाय	,,	48	,,	ஸர்வதோமுகாய	,,
४९	,,	सर्वाकाराय	,,	49	,,	ஸர்வாகாராய	,,
५०	,,	सर्वाधाराय	,,	50	,,	ஸர்வாதாராய	,,
५१	,,	सर्वाधिष्ठानाय	,,	51	,,	ஸர்வாதிஷ்டாநாய	,,
५२	,,	सर्वात्मने	,,	52	,,	ஸர்வாத்மநே	,,
५३	,,	सर्वाभावाय	,,	53	,,	ஸர்வாபாவாய	,,
५४	,,	साक्षिणे	,,	54	,,	ஸாக்ஷிணே	,,
५५	,,	शान्ताय	,,	55	,,	சாந்தாய	,,

५६	ॐ	चिन्मात्राय	नमः	56	ஓம்	சிந்மாத்ராய	நம:
५७	,,	शिवाय	,,	57	,,	சிவாய	,,
५८	,,	शुद्धाय	,,	58	,,	சுத்தாய	,,
५९	,,	स्वप्रकाशाय	,,	59	,,	ஸ்வப்ரகாசாய	,,
६०	,,	स्वयंप्रकाशाय	,,	60	,,	ஸ்வயம்ப்ரகாசாய	
६१	,,	स्वयाय	,,	61	,,	ஸ்வயாய	,,
६२	,,	शून्याय	,,	62	,,	சூந்யாய	,,
६३	,,	क्षेत्रज्ञाय	,,	63	,,	க்ஷேத்ரக்ஞாய	,,
६४	,,	ज्ञानस्वरूपाय	,,	64	,,	ஞாநஸ்வரூபாய	,,
६५	,,	स्थाणवे	,,	65	,,	ஸ்தாணவே	,,
६६	,,	दृक्स्वरूपाय	,,	66	,,	த்ருக்ஸ்வரூபாய	,,
६७	,,	नानारूपाय	,,	67	,,	நாநாரூபாய	,,
६८	,,	निष्क्रियाय	,,	68	,,	நிஷ்கிரியாய	,,
६९	,,	निष्प्रकृतये	,,	69	,,	நிஷ்ப்ரகிருதயே	,,
७०	,,	निष्प्रपंचाय	,,	70	,,	நிஷ்ப்ரபஞ்சாய	,,
७१	,,	नित्यमुक्ताय	,,	71	,,	நித்யமுக்தாய	,,
७२	,,	नित्यानन्दाय	,,	72	,,	நித்யாநந்தாய	,,
७३	,,	नित्याय	,,	73	,,	நித்யாய	,,
७४	,,	निरञ्जनाय	,,	74	,,	நிரஞ்ஜநாய	,,
७५	,,	निरवयवाय	,,	75	,,	நிரவயவாய	,,
७६	,,	निराकाराय	,,	76	,,	நிராகாராய	,,
७७	,,	निराधाराय	,,	77	,,	நிராதாராய	,,
७८	,,	निरिंद्रियाय	,,	78	,,	நிரிந்திரியாய	,,
७९	,,	निरीश्वराय	,,	79	,,	நிரீசுவராய	,,
८०	,,	निरुपद्रवाय	,,	80	,,	நிருபத்ரவாய	,,
८१	,,	नीरूपाय	,,	81	,,	நீரூபாய	,,
८२	,,	निर्गुणाय	,,	82	,,	நிர்க்குணாய	,,
८३	,,	निस्संबन्धाय	,,	83	,,	நிஸ்ஸம்பந்தாய	,,
८४	,,	निर्जीवाय	,,	84	,,	நிர்ஜீவாய	,,

८५	ॐ	निर्दोषाय	नमः	85	ஓம்	நிர்த்தோஷாய	நம:
८६	,,	निर्बद्धाय	,,	86	,,	நிர்ப்பத்தாய	,,
८७	,,	निर्मलाय	,,	87	,,	நிர்மலாய	,,
८८	,,	निर्लेपाय	,,	88	,,	நிர்லேபாய	,,
८९	,,	निर्विकल्पाय	,,	89	,,	நிர்விகல்பாய	,,
९०	,,	निर्विकारिणे	,,	90	,,	நிர்விகாரிணே	,,
९१	,,	निर्विशेषाय	,,	91	,,	நிர்விசேஷாய	,,
९२	,,	निर्विषयाय	,,	92	,,	நிர்விஷயாய	,,
९३	,,	निर्वृताय	,,	93	,,	நிர்விர்தாய	,,
९४	,,	परमानन्दाय	,,	94	,,	பரமாநந்தாய	,,
९५	,,	परमार्थाय	,,	95	,,	பரமார்த்தாய	,,
९६	,,	परिपूर्णाय	,,	96	,,	பரிபூர்ணாய	,,
९७	,,	प्रत्यक्स्वरूपाप	,,	97	,,	ப்ரத்யக்ஸ்வரூபாய	
९८	,,	प्रत्यक्षाय	,,	98	,,	பிரத்யக்ஷாய	,,
९९	,,	ब्रह्मणे	,,	99	,,	ப்ரஹ்மணே	,,
१००	,,	बुद्धाय	,,	100	,,	புத்தாய	,,
१०१	,,	पुरातनाय	,,	101	,,	புராதநாய	,,
१०२	,,	महते	,,	102	,,	மஹதே	,,
१०३	,,	महाशून्याय	,,	103	,,	மஹாசூந்யாய	,,
१०४	,,	मनोवाचामगोचराय		104	,,	மநோவாசாமகோசராய	
१०५	,,	मुक्ताय	,,	105	,,	முக்தாய	,,
१०६	,,	यथार्थवस्तुने	,,	106	,,	யதார்த்தவஸ்துநே	,,
१०७	,,	वस्तुने	,,	107	,,	வஸ்துநே	,,
१०८	,,	विभवे	,,	108	,,	விபவே	,,

ॐ श्रीमदखण्डपरिपूर्णसच्चिदानन्दाद्वैत ज्योतिर्लिङ्गस्वरूप
श्री देशिक स्वामिने नमो नमः
नाना विध मन्त्र पुष्पाणि समर्पयामि·

ஓம் ஸ்ரீமத் அகண்ட பரிபூர்ண சச்சிதாநந்த அத்வைத
ஜோதி லிங்க ஸ்வரூப ஸ்ரீ தேசிக ஸ்வாமிநே நமோ நம:
நாநா வித மந்திர புஷ்பாணி சமர்ப்பயாமி.

முகவுரை.

மனிதன் நன்மையினை அடைய வேண்டுமாயின், தன்னிடத்துள்ள கெட்ட குணங்களைப் போக்க வேண்டும். அக் குணங்கள் இவை எனத் தெரிய வேண்டும். அவற்றினைத் தெளிந்து நீக்குவதற்காகப் பெயர் விளங்காப் பெரியார் ஒருவர் சம்ஸ்கிருதத்தில் "மூர்க்க சதகம்" எனப் பெயர் வைத்து 26 சுலோகத்தில் ஒரு நூல் செய்திருக்கின்றார். அதன்கண் கெட்ட குணம் நூறு சொல்லப்பட்டிருக்கின்றது. அவை யாவும் மனிதன் முக்கியமாகத் தள்ளத்தக்கதாகும். குற்றம் அற்ற ரத்ந மணி எப்படி உலகத்தில் நன்றாக விளங்குகின்றதோ, அப்படிக் கெட்ட குணங்களை விட்ட மனிதன் உயர்வாக விளங்குகின்றான் என ஆரம்ப சுலோகத்தில் கூறுகின்றார். இக் குணங்கள் யாவும் மனிதர்கள் அநுபவத்தில் உள்ளவையேயாகும். இக் கெட்ட குணங்கள் பெரும்பான்மையாக நீதி நூல் திருக்குறள் முதலியவற்றில் கூறப்பட்டும் இருக்கின்றன. ஆயினும், தனியாக ஒரு நூலில் நூறு குணங்களும் வியக்தமாகக் கூறப்படவில்லை. "தன் குற்றம் பார்க்குமவருளரோ" எனச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறியிருப்பது போன்று, தத் தங் குற்றத்தை விசாரித்து அவற்றை விட விருப்புடையவர்கட்கு இந் நூல் பேருபகாரமும், பெரு விருந்தும் ஆகும்.

"1. சாமர்த்தியம் இருந்தும் முயற்சி செய்யாதவன் மூர்க்கன், 3. வேசியினுடைய வார்த்தையில் விசுவாசம் வைப்பவன் மூர்க்கன். 6. நிலம் உழுதல் முதலியவற்றின் லாபத்தில் சம்சயம் வைப்பவன் மூர்க்கன். 9. கடன் வாங்கி வீடு முதலியன வாங்குபவன் மூர்க்கன். 23. தனது திரவியத்தினை புத்திரனிடத்தில் கொடுத்து விட்டுத் தான் ஏழையாகி விடுபவன் மூர்க்கன்" என இவை போன்று நூறு கெட்ட குணங்கள் கூறப்படுகின்றன. ஒவ்வொரு கெட்ட குணமும் அநுபவமானதே. இந்தத் தூர்க்குணங்களை ஒவ்வொருவரும் அவசியம் போக்கிக் கொள்ள வேண்டும். நற் குண சம்பாதனத்திற்கு இது மிக அரிய நூலாயிருப்பதால், தமிழ் மக்கட்குப் பயன்படும் ஆறு நாகர அக்ஷரத்தில் சுலோகம் - பதம் - தமிழில் பதப் பொருள் கருத்து என்பவற்றை செவ்விய தமிழில் எழுதி வெளியிட்டிருக்கின்றோம்.

இந் நூல் செய்தவர் பெயர் முதலியன பின் தெரியின் மறுபதிப்பில் விளக்கமாக வெளியிடுவாம். இதற்கு ஹிந்திப் பாஷையில் தோஹாவும், வியாக்யானமும் அச்சாகி விளங்குகின்றது.

இதனை 1944 வருஷம் ஆகஸ்டுமீ 1 தேதி வட ஆற் காடு ஜில்லா, திரு வத்திபுரம் பழநி யப்ப நகரில் மொழி பெயர்த்து உரை எழுதினேம். எழு வருஷம் சென்று இப்போது அச்சாகி யிருக்கின்றது.

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்,
வேதாந்த மடம், திருப் பூ வணம்.

பாயிரம்.

தாவிலார் சிக்க லுகந்தலிங் கேச தேசிகன் பாததா மரையைக், கோவிலூர் வாழும் முத்திரா மேச குருவினைச் சிதம்பர விறையை, மேவருந் துறவாண் டவரடி யிணையை மெய்ப்பத மடைந்தவர்க் கருளும், நாவலர் பரவும் வீர ஞாநேச நல்லிறை பதங்களைப் பணிவாம். (1)

அடைந்தவர்க் கருளு மன்பினை யுடைய வருளிறை வீரமா முநியை, மிடைந்தவர்க் கபயங் கொடுத்திருள் கெடுக்கும் மெய்முத்தி ராமநல் லிறையைக், கடைந்தவர்க் காணின் களிப்புறுங் கருணைக் கடலெனுஞ் சிதம்பர விறையை, குடைந்தவ ருணு சலவிறை பதத்தைக் குறைவின்றி மநத்தினில் வைப்பாம். (2)

திருக்களர் விளங்கும் வீரசே கரன்செய் யடியிணை களைத்திநம் போற்றி, மருக்கமழ் மூர்க்க சதகமென் னூலை மாசிலாத் தமிழ்மொழி யதனில், தருக்கிளர் திருப்பூ வணமதி லுறையுந் தவமுறு காசிகா நந்தன், கருக்கிளர் நீங்கும் படியாதாப் பெயர்த்தான் கண்டுதான் களிப்புற மாதோ. (3)

உ

கிருஷ்ணாய பரப் பிரஹ்மணே நம:

भगवद्गीता पंचदशोऽध्यायः

पुरुषोत्तम योगः

श्री भगवानुवाच ।

ऊर्ध्वमूलमधः शाखमश्वत्थं प्राहुरव्ययम् ।
छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् ॥ (१)

(இ-ள்.) **मूलम्** - வேர், **ऊर्ध्वम्** - மேலது, **शाखम्** - சாகை, **अधः** - கீழது, **अव्ययम्** - நாசம் அற்ற, **अश्वत्थम्** - அரசு, **प्राहु:** - (என்று) கூறுகின்றனர், **छंदांसि** - சந்தஸ்க்கள், **यस्य** - எதனுடைய, **पर्णानि** - இலைகள், (ஆகின்றனவோ), **तम्** - அதை, **यः** - எவன், **वेद** - அறிந்தனனோ, **स** - அவன், **वेद** - **वित्** - வேதத்தினை அறிந்தவன் (ஆகின்ருன். (எ-று.)

பகவற் கீதை 15-வது — பிரபஞ்ச அத்தியாயம்.

சாயை யன்னவென் வினைத்தளை யறுக்கவோ தகவில்
பேயை யின்னுயிர் சேகுக்கவோ பிள்ளையாய் வளர்ந்தான்
வேயை யொன்றிய வரிசிலை விசயற்கு மீள
மாயை தன்னையோர் மரமோக்க வருணிக்க லுற்ருன். (1)

(இ—ள்.) சாயை - (தேகத்தின்) சாயை, அன்ன - போல (விட்டு நீங்காத), என் - (புண்ணிய பாப ரூப மான) என்னுடைய, வினை - வினை யாகிற, தளை - விலங்கை, அறுக்கவோ -

சேதிக்கவோ, தகவு இல் - கிருபை யில்லாத, பேயை - பூதகியை, இன் - இனிய, உயிர் - உயிரை, செகுக்கவோ - அழிக்கவோ, பிள்ளை ஆய் - (நந்த கோபன் திரு மனையில்) மதலை யாய், வளர்ந் தான் - வளர்ந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான், வேயை - மூங்கிலால், ஒன்றிய - பொருந்திய, வரி - வரிந்த, சிலை - தநுசை உடைய, விசயற்கு - அருச்சுநனுக்கு, மீள - (பூர்வ அத்தியாயங்களில் அங் கங்கே சொன்னதும் தவிர) மீண்டும் (இவ் வத்தியாயத்தில்), மாயை தன்னை - (சம்சார ரூப மான) மாயையை, ஓர் - ஓர், மரம் - விருக்ஷத்தை, ஒக்க - ஒப் பாக, வருணிக்கல் உற்றான் - சிறப்பிக்கத் தொடங்கினார், (எ-று).

மாயை தன்னை என்பதில் தன் அசை.

வேர்மேலது தலைகீழது வீவில்லது வேதத்
தேர்மேவிய விலைமேவிய தியாவும்புக றலினால்
ஆர்மேவிய வசுவத்தம தேனவே யரசதனின்
பேர்மேயது பெருமாயைசெய் பிறவிப்பெரு மரமே. (2)

(இ—ள்.) பெரும் - மஹா, மாயை - மாயையினால், செய் - பண்ணப்பட்ட, பிறவி - சம்சார ரூப மான, பெரும் - பெரிய, மரம் - விருட்ச மானது, மேலது - மேலானதை, வேர் - மூல மாக வுடையது, கீழது - கீழானவைகளை, தலை - சாகைக ளாக வுடையது, வீவு இல்லது - நாசம் ஆகாதது, வேதத்து - வேதத்தினது, ஏர் - கர்ம காண்ட வாக்கியங்களை, மேவிய - பொருந்திய, இலை - பர்ணங்க ளாக, மேவியது - உடையது, ஆர் மேவிய - நிறைந்த, அசுவத்தமது - அசுவத்தம், எனவே - என்று, யாவும் - (சுருதி ஸ்மிருதிகள்) அனைத்தும், புகல்தலினால் - வர்ணித்தலால், அரசதனின் - அரசினது, பேர் - பெயரை, மேயது - பொருந்தியது, (எ-று).

ஏ அசை. "அரசது" "அசுவத்தமது" என்பவற்றில் அது பகுதிப் பொருள் விகுதி.

[இங்ஙனம் தொகுத்துக் கூறியதை வகுத்துக் கூறத் தொடங்கி, "வேர் மேலது" என்பதற்கு வியாக்யாநம் செய்கின்றார்.]

இவ்வாறித னியல்பாகிய வகையாவெனி லியாதும்
ஒவ்வாவகை பெரிதாகிய பிரமத்துரு விடையே
வைவாள்வலி யுழவாவரன் முறையேவரன் முறையே
மெய்வான்முதல் வருமாதலின் மேலானது வேரே. (3)

(இ—ள்.) வை - கூர்மை பொருந்திய, வாள் - வாளாயுதத்தையும், வலி - வலிமையையும் உடைய, உழவா - வீரா, இவ்வாறு - இந்தப் பிரகாரம் (சுருதி ஸ்மிருதிகளிற் கூறிய), இதன் - இந்தச் சம்சார விருட்சத்தின், இயல்பு ஆகிய - சுபாவம் ஆகிய, வகை - கூறுபாடுகள், யா - எவை, எனின் - என்றால், யாதும் - (யாது) ஒரு பொருளும், ஒவ்வா வகை - (தனக்குச்) சமாதாநம் ஆகாதபடி, பெரிது ஆகிய - மஹத் தாகிய, பிரமத்து - பிரஹ்மத்தின், உருவிடையே - சொரூபத்தின்கண் ணின்றே, வரல் முறையே வரல் முறையே - உண்டாகும் கிரமப்படியே, மெய் - உண்மை (போல), வான் முதல் - ஆகாச முதல் (தூல தேச பரியந்த மான ஜகத் தனைத்தும்), வரும் ஆதலின் - உண்டாகின்ற வாதலால், மேலானது - (சொப்பிரகாச மாய் நித்திய மாய் சர்வ காரணங்கட்கும்) மேலான காரண மான அந்தப் பிரஹ்ம மானது, வேர் - மூல மாம், (எ-று).

ஏ அசை.

["தலை கீழது வீ வில்லது" என்னும் மொழிகளுக்கு உரை செய்கின்றார்.]

ஊழால்வரு முலகாகியு முயிராகியு மெழலால்
கீழானது தலையாவுறு முதலீறுடை கிளர்வாய்ச்
சூழாகிய பிறவித்தொட ரொருகாலமு மடையப்
பாழாம்வகை யழியாமையி லழியாததோர் படியே. (4)

(இ—ள்.) ஊழால் - (இச் சம்சார விருட்ச மானது பிராணிகளின்) அதிருஷ்ட வசத்தால், வரும் - வாராநின்ற, உலகு ஆகியும் - உலகங்கள் ஆகியும், உயிர் ஆகியும் - உயிர்கள் ஆகியும், எழலால் - எழுவதால், கீழானது - காரிய உபாதிகளை உடைய இரண்ணிய கர்ப்பாதிகளை, தலையா உறும் - சாகைக ளாகப் பொருந்தும், முதல் - தோற்றம், இடை - ஸ்திதி, ஈறு - நாசங்கள், கிளர் வாய் - பெருக்க மாய், சூழாகிய - பந்த ரூப மாகிய, பிறவி - சம்சார ரூப விருட்சத்தின், தொடர் - பிரவாக மானது, ஒரு - (யாது) ஒரு, காலமும் - காலத்தும், அடைய - முழுதும், பாழ் ஆம் வகை - சூநியம் ஆகும்படி, அழியாமையில் - அபாவ மாகாமையின், அழியாதது - அவ்வியய மான, ஓர் படியே - ஒரு தன்மையதே, (எ-று).

["வேதத் 'தேர் மேவிய விலை மேயது' அசுவத்தம்" என்பவற்றிற்கு உரை செய்கின்றார்.]

கருநாண்முதல் வினையாலது வளர்காதசெய் தலினால்
அருநான்மறை யவையேயிலை யவையாமென வறிநீ
வருநாள்களி னொருநாள்பெறும் வகையின்மையி னாலே
பெருநாடறி யசுவத்தம தெனலாயது பெயரே. (5)

(இ—ள்.) கரு - கர்ப்பத்தில் உண்டான, நாள் - நாள், முதல் - முத லாக, வினையால் - (புண்ணிய பாப ரூப) கர்மங்களால், அது - அச் சம்சார விருட்ச மானது, வளர் - வளராநிற்கும்,

காதல் - அபேட்சை, செய்தலினுல் - உடையவரா யிருத்தலால், அரும் - அரிய, நால் - நான்கு, மறை யவையே - வேதங்களே, இலே யவை ஆம் - (தர்ம அதர்மங்களைப் பிரகாசிப்பிக்கும் வழி யாக அதற்குப்) பர்ணங்க ளாம், என - என, நீ - நீ, அறி - அறிதி, வரும் - வாநின்ற, நாள்களின் - திநங்களுள்ளே, ஒரு நாள் - ஒரு நாள், பெறும் - இருக்கும் என, வகை - விசுவசிக்கும்படி, இன்மையினுல் - இல்லாமையினுலே, பெரும் - பெரிய, நாடு - உலக, அறி - பிரசித்த மான, அசுவத்தமது - அசுவத்தம், எனல் - என்று, ஆயது - சொல்லல் ஆயிற்று, பெயர் - நாம மானது, (எ-று).

'அசுவத்தமது' என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி.

[மூலத்தோடு கூடச் சம்சார ரூப விருட்சத்தின் ஞாநத்தை, ஸ்ரீ பகவான் ஸ்துதி செய்கின்றார்.]

மற்றிப்படி நிகழ்கின்றவிம் மாயாமர மிதனின்
பெற்றித்திற மிதுவல்லது பிறிதின்மையி னுலே
யுற்றிப்படி யுணர்வார்பொரு ளெல்லாமுமு ணர்ந்தார்
இற்றிப்பெரு மரத்தின்றிற மின்னுஞ்சில வுளகேள். (6)

(இ—ள்.) இப்படி - இவ் வாறாக, நிகழ்கின்ற - விளங்கா நின்ற, இம் மாயா - இச் சம்சார, மர மிதனின் - விருட்சத்தினு டைய, பெற்றி - தன்மை யாகிய, திறம் - கூறுபாடுகள், இது - இவை, அல்லது - அல்லாமல், பிறிது - வேறு ஒரு தன்மைகள், இன்மையினுலே - இல்லாமையினுலே, இப்படி - இங்கே கூறிய படியே, உற்று உணர்வார் - (இதனை) நுட்ப மாய் அறியாநிற்பவர், பொருள் - (வேத) அர்த்தங்கள், எல்லாமும் - முழுதும், உணர்ந் தார் - அறிந்தோ ராவர், இற்று - இத் தன்மைய தான, இப் பெரும் - இப் பெரிய, மரத்தின் - (சம்சார) விருட்சத்தின், திறம் - கூறு

பா டான அவயவ கற்பனைகள், இன்னும் - மேலும், சில - சில, உள - உள, கேள் - (நீ) கேட்பா யாக, (எ-று).

மற்று அசை நிலை.

अधश्चोर्ध्वं प्रसृतास्तस्य शाखा गुणप्रवृद्धा विषयप्रवालाः ।
अधश्च मूलान्यनुसन्ततानि कर्मानुबन्धीनि मनुष्यलोके ॥ (२)

(இ-ள்.) **तस्य** - அத னுடைய, **शाखाः** - சாகைகள், **ऊर्ध्वम्** - மேலும், **अधः च** - கீழும், **प्रसृताः** - விரிந்திருக்கின்றன, **गुण - प्रवृद्धाः** - (சத்துவம் முதலிய) குணங்களால் கட்டப்பட்டன, **विषय - प्रवालाः** - (சப்தம் முதலிய) விஷய ரூப முளைகளை உடையன, **मूलानि** - வேர்கள், **अधः च** - கீழும், **अनुसन्ततानि** - சிந்திக்கத் தக்கன, **मनुष्य - लोके** - மனித - லோகத்தில், **कर्म - अनुबन्धीनि** - கர்மங்களால் கட்டப்பட்டன வாம்.

[முற் கூறிய சம்சார விருட்சத்தின் அவயவங்களை மற் றொரு வித மாக இனிக் கற்பனை செய்கின்றார்.]

கண்ணேயெனை யனையாய்பல பிறவிக்கதி வழியே
மண்ணேமுதற் கீழாமுல கிடையேவளர் வனவும்
விண்ணேமுதன் மேலாமுல கிடையேமிடை வனவும்
எண்ணேறிய பவமாகிய பணையாலிசை தருமே. (7)

(இ—ள்.) கண்ணே - (எனது) கண்மணியும், எனை அனையாய் - என்னை யொப்பானவனு மான அருச்சுனு, பல - (சம்சார விருட்ச மானது) நாநா வித, பிறவி - யோநிக ளாகிய, கதி - கதிகளின், வழியே - வழியே, மண்ணே - பூமி, முதல் - முதலிய,

கீழ் ஆம் உலகிடையே - கீழ் உலகத்து, வளர்வனவும் - வளராநிற்பனவும், விண்ணே - விண், முதல் - முதலிய, மேல் ஆம் உலகிடையே - மேலுலகத்து, மிடைவனவும் - நெருங்கி நிற்பனவும் (ஆகிய), எண் - அளவு, ஏறிய - இறந்த, பவம் ஆகிய - பிறவிகளாகிய, பணையால் - பணைகளோடு, இசை தரும் - கூடி நிற்கும், (எ-று).

ஏ ஈற்று அசை.

[இதுவு மது.]

நெறியால்வரு தருவேர்பல நிலமாமுல கிடையே
அறியாமையயோ டுறவீழ்தலில் வேர்கீழினு முளதாம்
பிறியாதெழு குணமாகிய பெருநீர்மையில் வளரும்
பொறியாகிய விவைதாந்தளிர் போன்மேயது பொலிவே. (8)

(இ—ள்.) நெறியால் - (ஊர்த்வ லோகங்கள் அதோ லோகங்களிற் புஜித்த நாநா வித போகாநுபவ) வாயிலால், வருதரு - உண்டாகின்ற, வேர் - (இராகத் துவேஷாதி வாசனைகள் என்னும்) வேரானது, பல - பல, நிலம் ஆம் உலகிடையே - மாநுட வுலகின்கண்ணே, அறியாமையோடு - அஞ்ஞாநத்தோடு, உற - திடதாமாய், வீழ்தலில் - வீழ்ந்திருத்தலால், வேர் - (சம்சார விருட்சத்திற்கு) மூலமானது, கீழினும் - கீழேயும், உளது ஆம் - உளதாம், பிறியாது - நீங்காது, எழு - எழுகின்ற, குணம் ஆகிய - (சத்துவாதி) குணங்களாகிய, பெரும் நீர்மையில் - உபாதாநத் தன்மைகளால், வளரும் - (ஜலத்தால் விருட்சம் போல) வளராநிற்கும், பொறி ஆகிய இவை தாம் - (இந்திரியங்களால் ஜநியாநின்ற விருத்திகளோடு சம்பந்தமான) சப்தாதி விஷயங்களானவை, தளிர் - பல்லவங்கள், போல் - போன்று, பொலிவு - அழகாக, மேயது - பொருந்தியது, (எ-று).

தாம் ஏ அசைகள்.

न रूपमस्येह तथोपलभ्यते नांतो न चादिर्न च संप्रतिष्ठा ।
अश्वत्थमेनं सुविरूढमूल मसङ्गशास्त्रेण दृढेन छित्त्वा ॥ (३)

(இ-ள்.) **इह** - இந்தச் சம்சாரத்தில் உள்ள பிராணிகள், **अस्य** - இச் சம்சார விருக்ஷத்தினது, **तथा** - அவ் விதமான, **रूपम्** - சொரூபத்தை, **न** - **उपलभ्यते** - உணரார், **अंतः न** - அந்தத்தையும் உணரார், **आदिः च न** - ஆதியையும் உணரார், **संप्रतिष्ठा च न** - மத்தியையும் உணரார், **सुविरूढ - मूलम्** - அத் தன்மைய திட மான மூலத்தினை உடைய, **एनम्** - இந்த, **अश्वत्थम्** - அரச வடிவ சம்சார விருக்ஷத்தினை, **दृढेन** - மிகத் திட மான, **असंग** - வைராக்ய வடிவ, **शस्त्रेण** - வாளால், **छित्वा** - சேதித்துப் (பிரஹ்மம் உணரற்பால தாம்.)

ततः पदं तत्परिमार्गितव्यं यस्मिन्गता न निवर्तन्ति भूयः ।
तमेव चाद्यं पुरुषं प्रपद्ये यतः प्रवृत्तिः प्रसृता पुराणी ॥ (४)

(இ-ள்.) **ततः** - அதனல், **तत्** - அந்த, **पदम्** - பதமே, **परिमार्गि तव्यम्** - உணரத்தக்கது, **यस्मिन्** - எப் பதத்தில், **गताः** - நிலைத்தவ ளைய் (வித்துவான்), **भूयः** - மறித்தும், **निवर्तन्ति च न** - ஜன்மத்தினை யடைவ தில்லையோ, **यतः** - எப் புருஷனல், **प्रवृत्तिः** - (இச் சம்சார விருக்ஷத்தின்) பிரவிருத்தி, **पुराणी** - அநாதி யாய், **प्रसृता** - வந்துகொண்டிருக்கின்றதோ, **तम्** - அந்த, **आद्यम्** - ஆதி யாகிய, **पुरुषम्** - **एव** - புருஷனையே, **प्रपद्ये** - சரணுகதியாக அடைந்தேன்.

[முற் கூறிய சம்சாரத்தின்கண் அநிர்வசநீயத் தன்மை அருளிச் செய்கின்றார்.]

கனவுந்திகழ் கழுதாளியு மிகுகந்தர்வ நகரும்
எனவந்தழி தலினுலுரு வதுவின்றிய தியாது
முனம்வந்திடு முதனுளோடு முடிவின்மையி னுலே
தனதந்தமு முதலுந்தெரி தரவில்லது தானே. (9)

(இ—ள்.) கனவும் - (இச் சம்சார விருட்ச மானது) சொப்பந பதார்த்தமும், திகழ் - (பொய் யாக) விளங்குகின்ற, கழுதாளியும் - பேய்த் தேரும், மிகு - மே லான, கந்தர்வ நகரும் - கந்தருவ நகரமும், என - போல, வந்து - தோன்றி, அழிதலினுல் - அழிவதால், யாதும் - சிறிதும், உருவது - (தனக்கு என) உருவம், இன்றியது - இல்லாதது, முனம் - முன்னே, வந்திடும் - (தான் இல்லாதிருந்து) உண்டாகும், முதல் நாளொடு - ஆதி காலமும், முடிவு - (பின்னர்த் தான் அபாவ மாகும்) அந்த காலமும், இன்மையினுல் - இல்லாமை யினுலே, தனது - சம்சார விருட்சத்தினது, அந்தமும் - அந்தமும், முதலும் - ஆதியும், தெரிதர இல்லது - (எந்தப் பிராணிகளாலும்) அறியும்படிக் கில்லாதது, (எ-று).

தான் ஏ அசை நிலைகள். "உருவது" என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி.

ஆதி அந்தங்கள் இரண்டைப் பற்றியே மத்தியங் குறிப்பிடுவ தால், அவை சித்தியாமையினுலே, மத்தியமும் சித்தியாது என்பது.

[அதனைச் சேதிக்கும் உபாயம் அருளிச் செய் கின்ருர்.]

மந்திர மாய விந்த மரத்தினைத் துறவென் கின்ற
தந்திர வாளால் வெட்டித் தற்பர மாகி நின்றே
இந்திர சால மென்ன யாவையுங் காட்டு கிற்கும்
அந்தமி லாத வென்னை யடைகையே யடுப்ப தையா. (10)

(இ—ள்.) மந்திரம் ஆய - (அச்சுவத்தம் என்று வேதத்திற் சொல்லும்) இரகசிய மாகிய, இந்த மரத்தினை - இச் சம்சார விருட்சத்தை, தம் - தமது, திர உறவு - திட வைராக்கியம், என்கின்ற - என்னும், வாளால் - சஸ்திரத்தால், வெட்டி - சேதித்து (அதன் பின்னர் அதிகாரி யாயினோர் பிரம பத மறிய வேண்டியது.), [எவ் வுபாயத்தினால் பிரம பதம் அறியத் தக்க தெனிற் கூறுகின்றார்.] தற் பரம் - பிரம சொரூப மாய், ஆகின்றே - இருந்த வண்ணம் இருந்தே, இந்திர சாலம் - இந்திர சாலம், என்ன - போல, யாவையும் - (மாய மான இந்தப் பிரபஞ்சம்) அனைத்தையும், காட்டுகிற்கும் - தோற்றுவிக்கின்ற, அந்தம் - அந்தம், இலாத - அற்ற, என்னை - என்னை, அடைகையே - சரணடைதலே, ஐயா - அருச்சுனா, அடுப்பது - (அதிகாரிகள் பிரம பதத்தை அறிதற் குரிய) உபாய மாம். (எ-று).

निर्मानमोहा जितसंगदोषा अध्यात्मनित्या विनिवृत्तकामाः ।
द्वन्द्वैर्विमुक्ताः सुखदुःखसंज्ञैर्गच्छन्त्यमूढाः पदमव्ययं तत् ॥ (५)

(இ-ள்.) निर्मानमोहाः - மாந மோகங்களை நிவிர்த்தித்தவரும், जित - संग - दोषः - சங்க தோஷங்களைச் செயித்தவரும், अध्यात्म - नित्याः - பரமாத்ம வடிவ விசாரத்தில் தத் பரரும், विनिवृत्तकामाः - காமம் நீங்கினவரும், सुख - दुःख - संज्ञैः - சுக துக்கங்கள் என்னும், द्वन्द्वैः - (சீதோஷ்ண முதலிய) துவந்துவங்களை, विमुक्ताः - பரித்தியாகம் பண்ணினவரும் ஆகிய, अमूढाः - வித்துவான்கள், तत् - அந்த - अव्ययम् - அவ்விய, पदम् - பதத்தை, गच्छन्ति - அடைவர்கள்.

न तद्भासयते सूर्यो न शशांको न पावकः ।
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ॥ (६)

(இ-ள்.) **यत्** - எந்த நிர்க்குண மாகிய அத்விதியப் பிரஹ்ம வடிவ வைணவ பதத்தை, **गत्वा** - அடைந்து, **निवर्तन्ते** - **न** - (தத்துவ ஞாநி) மீண்டும் திரும்புவ தில்லையோ, **तत्** - அந்தப் பதத்தை, **सूर्यः** - சூரியனும், **न** - (விளக்குகின்றது) இல்லை, **शशांकः** - சந்திரனும், **न** - (விளக்குகின்றது) இல்லை, **पावकः** - அக்கினியும், **भासयते** - **न** - பிரகாசிப்பிக்கின்ற தின்றும், **मम** - எனக்கு, **तत्** - அது, **परमम्** - மேலான, **धाम** - இடம் ஸ்வயம் பிரகாச வடிவ மாகலின் என்க.

[**இதில் அத்வீதிய** நிர்க்குணப் பிரஹ்ம ரூப **மான வைஷ்ணவ பத** மடைதற் கேது **வான** மற்றோ ருபாயமும், அவ் வைஷ்ணவ **பதத்தின்** விசேஷணமும், **அருளிச்** செய்கின்றார்]

துன்னிய வாசை கோபங் கடந்தவர் காணத் தோன்றும்
என்னுரு வியற்கை கேட்கி லியாவையுங் காட்டு கின்ற
மன்னிய வொளிகள் காணு வகையதாய் வந்து சேர்ந்தார்
பின்னியல் வேறோன் றுகாப் பெற்றிய னென்று பேசும். (11)

(இ—ள்.) துன்னிய - (**ஊழ் வசத்தால் தம்மைக்**) கிட்டாநின்ற, **ஆசை கோபம்** - (பிரியாப்பிரிய **விஷயங்களா** லுளவாகும்) **இராகத்** துவேஷ (முதலியவற்றை), கடந்தவர் - பரித்தியாகஞ் **செய்த** ஞாநிகள், **காண** - காணும்படிக்கு, தோன்றும் - தோன்றாநிற்கும், என் - (அப்படிப்பட்ட வைஷ்ணவ பத மான) எனது, **உரு** - சொரூப, **இயற்கை** - சுபாவத்தை, **கேட்கில்** - (நீ) கேட்கில், யாவையும் - சர்வ ஜகத்தையும், **காட்டுகின்ற** - பிரகாசிப்பிக்கின்ற, **மன்னிய** - நிலைபெறுதலை யுடைய, **ஒளிகள்** - (சூரியன் சந்திரன் அக்கினி என்னும்) ஒளிகளினுல், **காணு** - பிரகாசிக்கப்

படாத, வகையது - தன்மையை யுடைய, ஆய் - (சொப்பிரகாச ஸ்வரூபம்) ஆய், வந்து - வந்து, சேர்ந்தார் - அடைந்தோர்கள், பின் - (சமுத்திரத்தை யடைந்த நதிகள் போல) பின்னர், இயல் - (தமது) சுபாவ மானது, வேறு - வேறு, ஒன்று - ஒரு வித மாக, ஆகா - ஆகாத, பெற்றியன் - தன்மையன், என்று - என்று, பேசும் - (என்னைச் சுருதிகள்) சொல்லும், (எ-று).

'வகையது' என்பதில், அது பகுதிப் பொருள் விகுதி.

ममैवांशो जीवलोके जीवभूतः सनातनः ।
मनः षष्ठानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति ॥ (௭)

(இ-ள்.) **जीव - लोके** - இச் சம்சாரத்தில், **मम** - என்னுடைய, **अंशः एव** - அம்சமே, **सनातनः** - பழைமை யான, **जीव - भूतः** - ஜீவ வடிவ மாம், **मनः** - (அச் சீவன்) மநதை, **षष्ठानि** - ஆருவ தாக உடைய, **प्रकृतिस्थानि** - பிரகிருதியின் கண் உள்ள, **इंद्रियाणि** - இந்திரியங்களை, **कर्षति** - ஆகர்ஷணஞ் செய்கின்றான்.

[சுவர்க்காதிகளை அடைந்த கர்மிகள் அவசியம் மீளாநிற்பதும், சுழுத்தி, பிரளயங்களில், ஆத்ம பாவத்தை யடைந்த பிராணிகள் மீளாநிற்பதும், பிரசித்தம், ஆவதால், உமது பதத்தை அடைந்தோர் ஏன் மீளாநிற்பர் எனின், அதற்குக் காரணம் அருளிச் செய்கின்றார்.]

குடந்தோறுந் தோன்று கின்ற காயமுங் குலைதற் கேற்பத்
தடம்புன ரோறுந் தோன்றுஞ் சந்திரன் றனு மென்ன
உடம்புக டோறும் வேறு யுயிரென நின்றே யந்த
விடம்படு புலன்க ளாறு மியல்பினி லியற்று வேனான்.(12)

(இ—ள்.) குடம் - கடம், தொறும் - தோறும், தோன்று கின்ற - (அவச்சின்ந மாய்த்) தோன்றுநின்ற, காயமும் - கடாகாய மும், குலைதற்கு - அசைதற்கு, ஏற்ப - ஏற்க, தடம் - தடாக, புனல் - ஜலங்கள், தோறும் - தோறும், தோன்றும் - (பிரதி விம்பித்துத்) தோன்றும், சந்திரன் தானும் - (பிரதிபிம்ப) சந்திர னும், என்ன - போல, உடம்புகள் - சரீரங்கள், தோறும் - தோறும், வேறு ஆய் - அந்நியம் ஆய், உயிர் - ஜீவன், என - போல, நின்றே - நின்றே, அந்த - அந்தச் சரீரங்களில், இடம்படு - (அஞ்ஞாந ரூப மான பிரகிருதியின்கண்ணே சூட்சும ரூப மாக) அடங்கி யுள்ள, புலன்கள் - இந்திரியங்கள், ஆறும் - ஆறினையும், இயல்பினில் - (போகத்திற் கேது வான கர்மம் ஆனது உதய மாயின் அப் போகத்தின் பொருட்டு) அவ் வவ் விந்திரியங்களின் சுபாவ விஷயங்களில், நான் - (பரமாத்ம தேவ னை) நான், இயற்றுவேன் - பிரேரிப்பிப்பேன், (எ-று).

"சந்திரன் தான்" என்பதில், தான் அசை.

शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः ।
गृहीत्वैतानि संयाति वायुर्गन्धानिवाशयात् ॥ (८)

(இ-ள்.) **यत्** - எப் போது, **ईश्वरः** - இச் சீவாத்மா, **उत्क्रामति अपि च** - (இந்தச் சரீரத்தினின்றும்) வெளிக் கிளம்பு கின்றதோ, **यत्** - எக் காலத்தில், **शरीरम्** - (வேறு) சரீ ரத்தினை, **अवाप्नोति** - அடைகின்றதோ, **एतानि** - (அப் போது) மநதோடு கூட இவ் விந்திரியங்களை, **गृहीत्वा** - கிர கித்துக் கொண்டு, **संयाति** - செல்லுகின்றது, **आशयात्** - (புஷ்பம் முதலிய) ஸ்தாநத்தினின்றும், **वायुः** - காற்று, **गन्धान्** - கந்தத்தை (இழுத்துச் செல்வது), **इव** - போல வாம்.

[இச் சீவாத்மா எந்தக் காலத்தில் மந முதலிய ஆறிந்திரியங்களையும் ஆகர்ஷணஞ் செய்கின்றான் என்னும் அருச்சுநன் சங்கைக்கு, ஸ்ரீ பகவான் அருளிச் செய்கின்றார்.]

பூக்கமழ் நாற்றங் கொண்டு பொருவளி போகு மாபோல்
தீக்கனல் கின்ற வேலோய் சீவனென் கின்ற சீரோன்
ஆக்கையை யெய்தும் போது மதனைவிட் டேகும் போதும்
போக்கிரி தாய வாறு புலன்களைக் கொண்டு போமால். (13)

(இ—ள்.) *தீ - அக்நியைப் (போல), கனல்கின்ற - ஒளிரா நின்ற, வேலோய் - வேலை யுடைய அருச்சுநா, பொரு - பொருந்திய, வளி - வாயு வானது, பூ - புஷ்பத்தினின்றும், கமழ் - பரிமளியாநின்ற, நாற்றம் - கந்தத்தை, கொண்டு - (கிரகித்துக்) கொண்டு, போகும் ஆ(று) - செல்லாநிற்குந் தன்மை, போல் - போல, சீரோன் - (தேகாதி சங்காதங்கட்குச் சுவாமி யாவதால்) ஈசுவர ரூபன், என்கின்ற - என்னும், சீவன் - சீவ ஆத்மா, ஆக்கையை - (கர்ம வசத்தால் ஓர் சரீரத்தினின்றும்) சரீராந்தரத்தை, எய்தும் - அடையும், போதும் - போதும், அதனை - அச் சரீரத்தை, விட்டு - விடுத்து, ஏகும் - (பர லோகத்திற்கு) செல்லும், போதும் - போதும், போக்க - போக்குதற்கு, அரிது - அரியன, ஆய - ஆன, ஆறு - (மந முதலிய) ஆறு, புலன்களை - இந்திரியங்களையும், கொண்டு - (கிரகித்துக்) கொண்டு, போம் - செல்லுவன், (எ-று).*

ஆல் அசை நிலை.

श्रोत्रं चक्षुः स्पर्शनं च रसनं घ्राणमेव च ।
अधिष्ठाय मनश्चायं विषयानुपसेवते ॥ (९)

(இ-ள்.) **अयम्** - இந்தச் சீவாத்மா, **श्रोत्रम्** - சுரோத்திரம், **चक्षुः** - சக்ஷு, **स्पर्शनम् - च** - துவக்கு, **रसनम्** - சிங்குவை, **घ्राणम् च** - கிராணம், **मनः** - மநம் என்பவற்றை, **अधिष्ठाय एव** - ஆசிரயித்தே, **विषयान्** - (சப்தம் முதலிய) விஷயங்களை, **उपसेवते** - நுகருகின்றது.

उत्क्रामन्तं स्थितं वापि भुंजानं वा गुणान्वितं ।
विमूढा नानुपश्यन्ति पश्यन्ति ज्ञानचक्षुषः ॥ (१०)

(இ-ள்.) **उत्क्रामन्तम् - वा** - உத்கிரமணஞ் செய்வதும், **स्थितम् - वा** - (அத் தேகத்தின்கண்ணே) நிலைத்திருப்பதும், **भुंजानम् वा** - (விஷயங்களை) நுகருவதும், **गुण अन्वितम् - अपि** - குணத்தோடு பொருந்தியது மாகிய, ஆத்மாவையும், **विमूढाः** - விமூட புருஷர், **अनुपस्यन्ति - न** - காணமாட்டார்கள், **ज्ञान - चक्षुषः** - ஞாந நேத்திரம் உடையவர்கள், **पस्यन्ति** - (அவ் வாத்மாவை) காண்கின்றார்கள்.

यतन्तो योगिनश्चैनं पश्यन्त्यात्मन्यवस्थितम् ।
यतन्तोऽप्यकृतात्मानो नैनं पश्यन्त्यचेतसः ॥ (११)

(இ-ள்.) **यतन्तः** - முயற்சியுடைய, **योगिनः च** - யோகிகள், **आत्मनि** - ஆத்மாவினிடத்தில், **अवस्थितम्** - நிலைத்தவராய், **एनम्** - (தனது உள்ளத்தின்கண் உள்ள) இந்த ஆத்மாவை, **पस्यन्ति** - பார்க்கின்றார்கள், **यतन्तः - अपि** - பிரயத்தநம் பண்ணியும், **अकृत - आत्मानः** - மலிந அந்தக்கரண முடைய, **अचेतसः** - அவிவேகிகள், **एनम्** - இவ்வாத்மாவை, **पस्यन्ति न** - பார்த்திலர்.

[எப் பிரயோஜநத்தின் பொருட்டு இச் சீவாங்மா ஆ றிந்திரியங்களையும் கிரகித்துக் கொண்டு செல் கின்றனன் எனின், அப் பிரயோஜநத்தை அருளிச் செய்கின்றார்.]

மின்னே யனைய வுடம்புதனை விடுவ தடைவ தாய் விடயங், தன்னே ரில்லா தான்றனே யார்கின் றனத் தன்மையினை, என்னே காணு ரறியாதா ரறிவா ரியோகத் தாலேதம், முன்னே காண்ப ரிதனியற்கை தெளிநீ யின்னு மொழிவன்கேள். **(14)**

(இ—ள்.) மின்னே - மின்னை, அனைய - போல, உடம்பு தனை - (தோன்றி அழிகின்ற) சரீரத்தை, விடுவது - பரித்தியாகம், அடைவது - கிரகிப்பதும், ஆய் - ஆகிய, தன் - தனக்கு, நேர் - (யா தொன்றும்) இணை, இல்லாதான் - இல்லாத ஜீவாங்மா வானவன், விடயம் - (சப்த ஸ்பரிசாதி) விஷயங்களை, ஆர்கின்றான் - (முன் சொன்ன இந்திரியங்களை ஆசிரய மாகக் கொண்டே) புஜிக் கின்றான், [இந்தப்படி தரிசந யோக்கிய மான ஆந்மாவை அவிவேகி கள் காணார், விவேகிகள் காண்பர் என்னும் பொருளை இப் போது அருளிச் செய்கின்றார்.] அத் தன்மையினை - (தமது புத்தியின் கண் ணுள்ள ஆங்மாவினது) அப்படிப்பட்ட தன்மையினை, அறியா தார் - (அசுத்த அந்தக் கரண முடைய) அவிவேகிகள், காணார் - (பிரயத்தநம் செய்தும்) அறியார், என்னே - இஃது ஆச்சரியம், அறிவார் - (சுத்த அந்தக் கரண முடைய) விவேகிகள், யோகத் தாலே - (தியாநாதி) உபாயங்களாலே, தம் - தமது, முன்னே - எதிரே, காண்பர் - அறியாநிற்பர், இதன் - (முன்னே சொன்ன பிரகார மாக) இவ் வாங்மாவின், இயற்கை - சுபாவத்தை, நீ - நீ, தெளி - அறி, இன்னும் - மேலும், மொழிவன் - கூறுகின்றேன், கேள் - கேள், (எ-று).

தான் ஏ அசை நிலைகள் 'உடம்புதனை' என்பதில் தன் அசை.

यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम् ।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ॥ (१२)

(இ-ள்.) **आदित्य - गतम्** - *இரவியின்கண் உள்ள,* **यत्** - *எந்த,* **तेजः** - *ஒளி,* **चन्द्रमसि** - *மதியின்கண் உள்ள,* **यत् - च** - *எந்த, (ஒளி),* **अग्नौ** - *அக்கினியில்,* **यत्** - *எந்த (ஒளி),* **अखिलम्** - *சகல,* **जगत्** - *உலகத்தினையும்,* **भासयते** - *பிரகாசிக்குமோ,* **तत्** - *அந்த,* **तेजः** - *ஒளிகளனைத்தையும்,* **मामकम्** - *எனது ஸ்வரூபம் என்றே,* **विद्धि** - *உணர்தி.*

गामाविश्य च भूतानि धारयाम्यहमोजसा ।

(இ-ள்.) **च** - *மற்றும்,* **ओजसा** - *(எனது) வலியால்,* **गाम्** - *இப் பூமியையும்,* **आविश्य** - *மிகத் திடம் செய்து,* **भूतानि** - *சர்வ பூதங்களையும்,* **अहम्** - *(பரமேசுவரனை) நான்,* **धारयामि** - *தாரணம் பண்ணுவேன்.*

இந்தியங் களுக்குங் கண்ணு னிரவிதீ யிந்து வின்பால்,
வந்தெழு கதிரு நானே மாநில மாகி நின்றே,
கந்தியன் றனைய தோளாய் கந்தமே முதலாந் தன்மை,
தந்துரந் தரித்தீ தெல்லாந் தாங்குகின் றேனு நானே. **(15)**

(இ—ள்.) *கந்து - தூண், இயன்ற - இயைந்தாற், அனைய - போன்ற, தோளாய் - புயத்தினை உடைய அருச்சுனா, இந்தியங்களுக்கும் - (சட்சு முதலிய) இந்திரியங்கட்கும், கண் - (மனதுக்கும் வாக்குக்கும் தத் தம் விஷயங்களைப் பிரகாசிப்பிக்கும் சாமர்த்திய ரூபமான) தேஜஸ், நான் - நான் ஆகிறேன், இரவி - (இந்திரியங்களி னிடத்து அநுக்கிரகஞ் செய்யாநிற்கும்) சூரியன், இந்து - சந்திரன், தீயின்பால் - அக்கினி யென்னும் இவைக ளிடத்து,*

வந்து - உதித்து, எழு - ஒளிராநிற்கும், கதிரும் - தேஜஸ்ஸும், நானே - நான் ஆகிறேன், மா நிலம் - பிருதிவி, ஆகி - (தேவதா ரூபம்) ஆகி, நின்று - நின்று, கந்தமே - கந்தம், முதல் ஆம் - முதலிய, தன்மை - குணங்களை, தந்து - (அதற்குத்) தந்து, உரம் - (எனது) பலத்தை, தரித்து - (அதில்) வைத்து (அத்தியந்தம் திடம் ஆக்கி), ஈது - (அதில் உள்ள ஸ்தாவர ஜங்கம ரூப மான) இப் பூதங்கள், எல்லாம் - அனைத்தையும், தாங்குகின்றேனும் - தரிக்கின்றவனும், நானே - (பரமேசுவர னுன) நானே யாம், (எ-று).

पुष्णामि चौषधीः सर्वाः सोमो भूत्वा रसात्मकः ॥ (१३)

(இ-ள்) **च** - அங்ஙனமே, **रस आत्मकः** - (சர்வ) ரச சுபாவ முடைய, **सोमः** - சோம, **भूत्वा** - வடிவ மாய், **सर्वाः** - சர்வ, **ओषधीः** - ஓஷதிகளையும், **पुष्णामि** - புஷ்டி யுடைய தாய்ச் செய்வேன்.

[இதுவு மது.]

முந்து வான்சுவை மூர்த்த மாகிய,
இந்து வாகிநின் றுணவி யாவினும்,
தந்து சேர்சுவை தகவ வற்றிலே,
நந்தி டாவகை வளர்க்கின் றேனுநான். (16)

(இ—ள்.) முந்து - முதன்மை யான, வான் - ஆகாயத்தின் கண்ணே, சுவை - (சர்வ) ரஸங்களின், மூர்த்தம் ஆகிய - ஆகார மான, இந்து - சந்திர ரூபம், ஆகிநின்று - ஆய் நின்று, உணவு - (உண்ணத் தக்கவைக ளான விரீஹீ யவை முதலிய) ஓஷதிகள், யாவினும் - அனைத்திலும், தக - (அவற்றிற்கு) உரியன வாய்,

சேர் - பொருந்துகின்ற, சுவை - இரதங்களை, தந்து - கொடுத்து, அவற்றிலே - அவ் வவ் வோஷதிகளிலே, நந்திடா வகை - (அவ் விரதங்கள்) கெடாதபடிக்கு, வளர்க்கின்றேனும் - விருத்தி செய்கின்றவனும், நான் - (பரமேசுவர னை) நானே யாம், (எ-று).

अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमाश्रितः ।
प्राणापानसमायुक्तः पचाम्यन्नं चतुर्विधम् ॥ (१४)

(இ-ள்) अहम् - (பரமேசுவர ஞகிய) நான், वैश्वानरः - ஜாடராக்கினி, भूत्वा - வடிவ மாய், प्राणिनाम् - (சர்வப்) பிராணிகளின்து, देहम् - தேஹத்தை, आश्रितः - ஆசிரயித்துக்கொண்டு, प्राण - अपान - समायुक्तः - பிராண அபானன்களோடுகூடி चतुर्विधम् - (மிகத் தேஜஜை யுடைய தாய்) நால் வகை, अन्नम् - அந்நத்தையும், पचामि - ஜீர்ணிப்பிக்கிறேன்.

[இதுவு மது.]

தின்ப நக்குவ சுவைப்ப வுண்பவாய்,
நன்ப யன்செயு நால்வகை யுண்டியும்,
இன்ப மாம்வகை யாக்கைக டோறுநின்,
றன்ப வங்கியா யறுக்கின் றேனுநான். (17)

(இ—ள்.) அன்ப - அருச்சுநா, தின்ப - தின்பனவும், நக்குவ - நக்குவனவும், சுவைப்ப - சுவைப்பனவும், உண்ப ஆய் - உண்பனவும் ஆய், நன் - நல்ல, பயன் - பயனை, செயும் - செய்யாநின்ற, நால் வகை - நான்கு கூறுபா டுடைய, உண்டியும் - அந்நத்தையும், இன்பம் ஆம் வகை - சுகத்திற்கு எது வாகும்படி, ஆக்கைகள் தோறும் - (பிராணிகள்) சரீரங்கள் தோறும், அங்கி ஆய் - ஜாடராக்கினி ரூப மாய், நின்று - (பிராண அபானன்களோடு

கூடி) நின்று, அறுக்கின்றேனும் - பரிபாகஞ் செய்கின்றவனும், நான் - (பரமேசுவர ஞன) நானே யாம், (எ-று).

सर्वस्य चाहं हृदि संनिविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च ।

(இ-ள்) **च** - மற்றும், **अहम्** - (பரமாத்ம தேவ ஞகிய) நானே, **सर्वस्य** - சர்வப் பிராணிகளின், **हृदि** - புத்தியில், **सन्निविष्टः** - (ஜீவ வடிவ மாய்) புகுந்தேன், **मत्तः** - (ஆத்ம தேவ ஞகிய) என்னினின்றே, **स्मृतिः** - (அச் சர்வ பிராணி கட்கும்) மிருதியும், **ज्ञानम् - च** - ஞாநமும், **अपोहनम् च** - (அவ் விரண்டின்) அபாவமும் உண்டாகின்றது.

நல்ல மாந்தர்நல் லறிவு நன்கிலாப்
புல்லர் தங்கள்புல் லறிவும் போர்திகழ்,
வில்ல மைந்ததோள் வீரர் வீரயான்,
அல்ல தில்லையேன் றறிய வேண்டுமே. **(18)**

(இ—ள்.) போர் - யுத்தத்தின் பொருட்டு, திகழ் - விளங்கா நின்ற, வில் - தநுசு, அமைந்த - பொருந்திய, தோள் வீரர் - புஜத்தை யுடைய வீரரில், வீர - அதிவீர ஞன அருச்சுநா, நல்ல மாந்தர் - புண்ணிய கருமங்களை யுடைய மாநுடரின், நல் அறிவும் - பே ரறிவும், நன்கு - நன்மை, இலா - இல்லாத, புல்லர் தங்கள் - பாவிக ளுடைய, புல் அறிவும் - சிற் றறிவும், நான் - (பரமேசுவர ஞன) நானே, அல்லது - அல்லாமல், இல்லை - (வேறு) இல்லை, என்று - என்று, அறிய வேண்டும் - (நீ) அறியத் தக்கதே, (எ-று).

'புல்லர் தங்கள்' என்பதில் தம், ஏ அசை.

वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृद्वेदविदेव चाहम् ॥ (१५)

(இ-ள்) **सर्वैः** - சர்வ, **वेदैः च** - வேதங்களாலும், **अहम् - एव** - (பரமேசுவர ஞகிய) நானே, **वेद्यः** - அறிதற் குரியோனும், **वेदान्त - कृत् च** - வேதாந்த அர்த்த சம்பிரதாயப் பிரவிர்த்தகனும், **वेद - विद्** - சர்வ வேத அர்த்தத்தையும் அறிபவனும், **अहम् - एव** - நானே ஆகின்றேன்.

[இதுவு மது.]

அசைவி ஞன்மறை யறிவ ஞனதன்,
வசையி லாதமெய்ப் பொருளும் வாய்மைசேர்,
இசையி ஞலெடுத் தோது வேனுநான்,
விசைய கேளினும் வேறு மொன்றையே. (19)

(இ—ள்.) அசைவு இல் - அபாதித மான, நால் - நான்கு, மறை - வேதங்களின் பொருள்களையும், அறிவன் - அறியாநிற்பவனும், நான் - நானே, அதன் - அந்த வேதங்களி னுடைய, வசை - நிந்தை, இலாத - அற்ற, மெய் - உண்மை, பொருளும் - பொருளும் (வேத வேத்தியனும் என்றபடி), வாய்மை சேர் - மெய்ம்மையாகிய, இசையினல் - சுரங்களினல், எடுத்து - எடுத்து, ஓது வேனும் - போதியாநிற்கும் (சம்பிரதாயப் பிரவர்த்தக ஞன) குருவும், நான் - நானே, இனும் - இன்னும், வேறு - வேறு, ஒன்றை — ஒரு பொருளையும், விசைய - அருச்சுநா, கேள் - கேட்பாய், (எ-று).

ஏ அசை.

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ॥ (१६)

(இ-ள்.) लोके - சம்சாரத்தில், इमौ - இவ், द्वौ - एव - இரு வகை, पुरुषौ च - புருஷர்கள் ஆவர், क्षरः - च - (ஒருவரோ) க்ஷர புருஷர், अक्षरः - (மற்றொருவரோ) அக்ஷர புருஷர், सर्वाणि - (அவர்களுள் காரிய வடிவ) சர்வ, भूतानि - பூதங்களுமோ, क्षरः - க்ஷர புருஷர் எனப் படுவர், कूटस्थः - (காரண வடிவ) மாயை, अक्षरः - அக்ஷர புருடர், उच्यते - எனப்படுவர்.

[இவ்வாறு தமது சோபாதிக சொரூபத்தை ஸ்ரீ பகவான் அருளிச்செய்து அருச்சுநனிடத்துக் கிருபை கூர்ந்து, க்ஷர அக்ஷர மென்னும் பெயருடைய காரிய காரண ரூபமான இரண்டு உபாதிகளுமில்லாத நிரு பாதிக மான தமது சுத்த சொரூபத்தை அருளிச் செய்கின்றார்.]

மருவு கின்றவிவ் வுலகின் மாய்தலே,
உருவ மாகமுன் புடைய தோன்றுமே,
அருவ மோன்றினு லழிவ தின்மையே,
பொருவ நின்றதோர் பொருளு முண்டரோ. (20)

(இ—ள்.) மருவுகின்ற - பொருந்துகின்ற, இவ் உலகில் - இவ் வுலகின்கண், மாய்தலே - அழிதலேத் தானே, உருவம் ஆக - வடிவம் ஆக, முன்பு உடையது - எதிரே உள்ள தாகிய, ஒன்றும் - ஓர் பொருளும், அருவம் - அருவ மாய், ஒன்றினல் - ஓர் எது வினலும், அழிவது - அழிவு, இன்மையே - இல்லாமையைத் தானே, பொருவ நின்றது - பொருந்தும்படி நிற்ப தாகிய, ஓர் பொருளும் உண்டு - ஓர் பொருளும் உண்டு, (எ-று).

எ அரோ அசை நிலைகள்.

[அவற்றின் சொரூபத்தை ஸ்ரீ பகவான் தாமே வெளிப்படை யாக அருளிச் செய்கின்றார்.]

மொழிசெய் கின்றவிவ் விரண்டு முற்றவே
விழியி னாலுற நோக்கின் மெய்ம்மையே,
அழிவ தாக்கையாங் கழிவு பாடிலா,
தொழிவ தென்னெனி னுயிரென் கின்றதே. (21)

(இ—ள்.) மொழி செய்கின்ற - (க்ஷரம் அக்ஷரம் என்று) கூறுகின்ற, இவ் விரண்டும் - இவ் விரண்டு (பொருள்களையு)ம், முற்ற - முழுதும், விழியினால் - அறிவினால், மெய்ம்மையே - உள்ளபடியே, உற - அழுந்த, நோக்கில் - ஆராய்ந்திடில், அழிவது - க்ஷரம் (என்று சொல்லப்படுவது), ஆக்கை - (பிரமா முதல் ஸ்தாவர பரியந்த மான) சரீரங்கள், அழிவுபாடு இலாது ஒழிவது என் எனின் - அக்ஷரம் ஆவது எது என்றால், உயிர் என்கின்றது - (சரீரம் அழியினும் அழியாமல் நிர்விகாரமா யுள்ள) சேதந மான போக்தா என்று சொல்லப்படுகின்றது, (எ-று).

ஏ. ஏ. ஆங்கு அசை நிலைகள்.

उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ (१७)

(இ-ள்.) तु - மிக, उत्तमः - மேலாகிய, पुरुषः - புருஷனே, अन्यः - வேறே யாவன், परमात्मा - பரமாத்மா, इति - என, उद् - आहृतः - பெயரிய சேதநன், यः - எவன், लोक त्रयम् - மூன்று லோகங்கட்கும், आविश्य - பற்றுக்கோடாய் நின்று, बिभर्ति - தாங்குவனோ (அவன்), अव्ययः - அவ்யய ரூபனும், ईश्वरः - ஈசுவர ரூபனும் ஆவன்.

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥ (१८)

(இ-ள்.) **यस्मात्** - எதனால், **अहम्** (பரமேசுரனாகிய) நான், **क्षरम्** - க்ஷரத்தையும், **अतीतः - च** - கடந்தவனோ, **अक्षरात् - अपि** - அக்ஷரத்தினின்றும், **उत्तमः** - உத்கிருஷ்டனோ, **अतः** - அதனாலே, **लोके - च** - உலகத்திலும், **वेदे** - வேதத்திலும், **पुरुष - उत्तमः** - புருஷோத்தமன் (என), **प्रथितः** - பிரசித்த மாக, **अस्मि** - விளங்குகின்றேன்.

[இனி க்ஷரம் அக்ஷரம் என்னும் இரண்டு உபாதிகட்கும் விலக்ஷணனாய் அவ்விரண்டு உபாதிகளின் தோஷங்களோடு கூடாத, நித்திய சுத்த புத்த முத்த சுபாவனான பரமாத்மாவை ஸ்ரீ பகவான் அருளிச் செய்கின்றார்.]

இவையி ரண்டையுங் கடந்தி யாதுமோர்,
நவையு மின்றியே நாச மின்றியே,
எவையு மின்றியே யிழிவு மின்றியே,
குவையி னின்றதோர் குறியி லின்பமே. **(22)**

(இ-ள்.) இவை இரண்டையும் - முன் சொன்ன (க்ஷரம் அக்ஷரம் என்னும்) இரண்டிற்கும், கடந்து - அந்நிய மாய், யாதும் - (அவ் விரண்டின்கண் ணுள்ள) எதுவும், ஓர் - ஒரு, நவையும் - தோஷம், இன்றி - இல்லாமல், நாசம் - (உத்பத்தி) நாசம், இன்றி - (முதலிய விகாரங்கள்) இல்லாமல், எவையும் - எவையும், இன்றி - (தன்கண் பரமார்த்த மாக) இல்லாமல், இழிவும் - (யாது ஒரு) குறைவுபாடும், இன்றி - இல்லாமல், குவையில் - லோகத்

திரயங்களிலும், நின்றது - (தனது சக்தியால் வியாபித்துத் தனது சத்பாவத்தால் அவைகளைத் தரித்து) நின்றது, ஓர் - (யாது) ஒரு, குறியில் - விசேஷணமும் இல்லாத, இன்பம் - ஆநந்த ரூபமான பரமாத்மா என்பது, (எ-று).

यो मामेवमसंमूढो जानाति पुरुषोत्तमम् ।
स सर्वविद्भजति मां सर्वभावेन भारत ॥ (१९)

(இ-ள்.) **भारत** - பாரத, **य:** - எவன், **असंमूढः** - மிகுதியான மோகம் இன்றி, **माम्** - பரமேசுவரனாகிய என்னை, **एवम्** - இவ்வாறு, **पुरुष - उत्तमः** - புருஷோத்தம வடிவமாய், **जानाति** - உணர்பவனாகிய, **सः** - அந்த, **सर्व - वित्** - சர்வஞ்ஞனானவனே, **सर्व - भावेन** - பக்தியோகத்தினால், **माम्** - (பரமேசுவரனாகிய) என்னை, **भजति** - சேவிக்கின்றான்.

[இவ்வாறான தன்மையை அறிந்ததனால் வரும் பயனை அருளிச் செய்கின்றார்.]

இந்த வின்பமா மென்னை யுள்ளவா,
சிந்தை யின்கணே தெளிதன் மேயினார்,
பந்த மொன்றிலார் பழைய விப்பொருட்,
கந்த மாதிவே றறிய வொண்ணுமோ. **(23)**

(இ—ள்.) இந்த - முன் சொன்ன, இன்பம் ஆம் - (சர்வ விகாரங்களும் இறந்த, நிரதிசய) ஆநந்த ரூபமாகிய, என்னை - என்னை, உள்ள ஆ(று) - உள்ளபடியே, சிந்தையின்கணே - (தமது) புத்தியின்கண்ணே, தெளிதல் - அறிதலை, மேயினார் - பொருந்தினோர், பந்தம் - பந்தம், ஒன்றிலார் - அடையார், [அதற்கு ஏது

கூறுகின்றார்.] பழைய - (எவற்றிற்கு) முன்னே யுள்ள, இப் பொருட்கு - இப் பரமாத்ம வஸ்துவிற்கு, அந்தம் - அந்தமும், ஆதி - ஆதியும், வேறு - வேறே (உண்டு என்று), அறிய - அறிய, ஒண்ணுமோ - கூடுமோ (கூடாது), (எ-று).

इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयानघ ।
एतद्बुद्ध्वा बुद्धिमान्स्यात्कृतकृत्यश्च भारत ॥ (२०)

(இ-ள்.) **अनघ** - ஹே சர்வ வியசந ரகித, **भारत** - பாரத, **मया** - பகவா னாகிய நான், **इति** - கூறிப் போந்த வாறாய், **गुह्यतमम्** - மிகவும் ரகஸ்ய வடிவமும், **शास्त्रम्** - சம்பூர்ண சாஸ்திர வடிவமு மாகிய, **इतम्** - பதி னைந்தாவது அத்தியாயத்தினை, **उक्तम्** - கூறினேன். **एतत्** - இதை, **बुद्ध्वा** - உணர்ந்தவன், **बुद्धिमान्** - **च** - (ஆத்ம) ஞாந முடையவனும், **स्यात्** - ஆகின்றான், **कृतकृत्यः** - கிருத கிருத்தியனும் (ஆகின்றான்.)

[தமது ஞாநத்தின் அரிய தன்மையை அருளிச் செய்கின்றார்.]

வேத நாலுநின் றுரைசெய் தாலுமோன்
றோத லாவதன் றுலக றிந்ததோ
காத லாலெனக் கினிய தோழனீ,
ஆத லாலுனக் கறிய வோதினேன். **(24)**

(இ—ள்.) வேதம் நாலும் - (இருக்கு முதலிய) நான்கு வேதங்களும், நின்று - (ஒரே முக மாக) நின்று, உரை செய்தாலும் - சொல்லத் தொடங்கினாலும், ஒன்று - சிறிதும், ஓதல் - சொல்லல், ஆவது அன்று - ஆவது அன்று, உலகு அறிந்ததோ - உலகுதான் அறிந்ததோ (அன்று), நீ - அர்ச்சுநா (நீ), எனக்கு - (ஈசுர னான)

எனக்கு, இனிய - பிரிய மாகிய, தோழன் - சிநேகன், ஆதலால் - ஆதலால், காதலால் - கருணையினுல், உனக்கு - உனக்கு, அறிய - அறியும்படி, ஓதினேன் - (அதி ரகசிய மான எனது சொரூபத்தை) உபதேசித்தேன், (எ-று).

உலகு - உயர்ந்தோரை.

[அத்தியாயத்தை உபசம்மரிக்கின்ருர்.]

கண்ணையோ ரிடத்து மின்றி யதனிலே வைக்கிற் காதல்,
பண்ணையோ டாக்கு கின்ற வினையெலாம் பயக்கு மென்ருன்
வெண்ணையோ விதுரனிட்ட விருந்தையோ வேலை சூழ்ந்த
மண்ணையோ வுண்டு முன்னுள் வருபசி தீர்ந்த மாயோன். (25)

(இ—ள்.) கண்ணை - புத்தியை, ஓரிடத்தும் - எந்த விஷயங்களிலும், இன்றி - வையாமல், அதனிலே - (நிரதிசயாநந்த ரூப மான) பரமாத்மாவின்கண்ணேயே, வைக்கில் - ஸ்திதி யடையப் பண்ணில், காதல் பண்ணையோடு ஆக்குகின்ற - ஆசா சமூகங்களோடு கூடிச் செய்கின்ற, வினை - (சாஸ்திர விகித மான) கர்மங்கள், எலாம் - அனைத்தும், பயக்கும் - செய்து முடிந்தனவாகவே ஆகும், என்ருன் - என்று அருளிச் செய்தனர், வெண்ணையோ - (இளங் கோபிகா ஸ்திரீகளால் கொடுக்கப் பெற்ற) நவ நீதத்தையோ, விதுரன் இட்ட விருந்தையோ - விதுரராற் கொடுக்கப் பெற்ற விருந்தையோ, வேலை சூழ்ந்த மண்ணையோ - சமுத்திரஞ் சூழ்ந்த பூமியையோ, உண்டு - திரு அமுது செய்து, முன் னுள் - (நந்த கோபன் திரு மனையில் மதலையாய்) அவதரித்த ஞான்று, வரு - வாராநின்ற, பசி - பசி, தீர்ந்த - ஒழிந்த, மாயோன் - ஸ்ரீ கண்ணபிரான், (எ-று).

15-வது (புருஷோத்தம யோக) பிரபஞ்ச அத்தியாயம் முற்றுப் பெற்றது.

உ
சிவமயம்.
ஓம் பரப்பிரஹ்மணே நம:
ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிகாய நம:

मूर्ख शतकम् ।

மூர்க்க சதகம்.

श्रृणु मूर्खशतं राजंस्तं तं भावं विवर्जयेत् ।
येन संदीप्यते लोके दोषहीनो मणिर्यथा ॥ (१)

(இ-ள்.) **राजन्** - ஹே அரசனே!, **मूर्ख शतं** - மூர்க்கனது நூறு லக்ஷணத்தை, **श्रृणु** - கேட்பாயாக, **तं** - அந்த, **तं** - அந்த, **भावं** - தன்மையினை, **विवर्जयेत्** - விடுக, **यथा** - எங்ஙனம், **मणिः** - மணியானது, **लोके** - லோகத்தில், **येन** - எதனால், **संदीप्यते** - நன்கு விளங்குகின்றது.

(கருத்து) ஹே அரசனே! மூர்க்கனது நூறு லக்ஷணத்தினைக் கேட்பாயாக. அவற்றினை விடுதலினால் மநிதன் தோஷமின்றிய ரத்நம் போல் பிரகாசிக்கின்றான். (1)

सामर्थ्ये विगतोद्योगः स्वश्लाघी प्राज्ञपर्षदि ।
वेश्या वचन विश्वासी प्रत्ययी दम्भडम्बरे ॥ (२)

(இ-ள்.) 1. **सामर्थ्ये** - சாமர்த்தியம் இருந்தும், **उद्योगः** - முயற்சி, **विगतः** - இல்லாதவன் (மூர்க்கன்), 2. **प्राज्ञ-पर्षदि** - புத்திமான்களுடைய கூட்டத்திலிருந்துகொண்டு, **स्व - श्लाघी** - தன்னை உயர்த்திக் கூறுவோன் (மூர்க்கன்), 3. **वेश्या - वचन - विश्वासी** - வேசியினது வார்த்தையில் விசு

வாசம் வைப்பவன் (மூர்க்கன்), 4. दम्भ - डम्बरे - கபட மான (பொய்யான) கூட்ட (ஆடம்பர) த்தில், प्रत्ययी - பிரி யம் வைப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 1. சாமர்த்தியம் இருந்தும் முயற்சி செய்யாதவன். 2. புத்திமான்க ளுடைய கூட்டத்தி லிருந்து கொண்டு தன்னை உயர்த்திக் கூறுபவன். 3. வேசியி னுடைய வார்த்தையில் விசுவாசம் வைப்பவன். 4. பொய் யான ஆடம்பாத்தில் பிரியம் வைப்பவன் என்னும் இன் னுல்வரும் மூர்க்கர் என அறிக. (2)

द्यूतादि वित्तबद्धाशः कृष्याद्यायेषु संशयी ।
निर्बुद्धः प्रौढकार्यार्थि विविक्तरसिको वणिक् ॥ (३)

(இ-ள்.) 5. द्यूत - आदि - वित्त - बद्ध - आशः - சூது முத லிய உபாயங்களினுல் திரவியம் கிடைக்கும் என ஆசை வைத்திருப்பவன் (மூர்க்கன்), 6. कृषि - आदि - आयेषु - உழவு முதலியவற்றின் லாபங்களில், संशयी - சம்சயம் உடையவன் (மூர்க்கன்), 7. निर्बुद्धिः - மந்த புத்தியோடு கூடியவனுய், प्रौढ - कार्य - आर्थि - பெரிய காரியம் செய்ய இச்சிப்பவன் (மூர்க்கன்), 8. वणिक् - வியாபாரியா யிருந்து, विविक्त - रसिकः - ஏகாந்தத்தில் இருக்கும் சௌக் கிய விருப் புடையவன் (மூர்க்கன்).

(கருத்து) 5. சூது முதலிய உபாயங்களினுல் தநத்தில் ஆசை வைப்பவன். 6. நிலம் உழுதல் முதலியவற்றின் லாபங்களில் சம்சயம் உடையவன். 7. மந்த புத்தி யுடையவ னுய் பெரும் பெருங் காரியங்கள் செய்வதில் விருப் புடையவன். 8. வியாபாரியா யிருந்து ஏகாந்த ஸ்தாநத்தில் இருத்தற்கு விருப்புடையவன் என்னும் இவர் கள் மூர்க்கர் என அறிக. (3)

ऋणेन स्थावरक्रेता स्थविरः कन्यकावरः ।
व्याख्याता चाश्रुते ग्रन्थे प्रत्यक्षार्थेप्यपह्नवी ॥ (४)

(இ-ள்.) 9. **ऋणेन** - கடன் வாங்கி, **स्थावर - क्रेता** - வீடு (முதலியன) வாங்குவோன் (மூர்க்கன்), 10. **स्थविर-** கிழவ ஞகி, **कन्यका - वरः** - கந்நிகையோடு வி வா க ம் செய்வோன் (மூர்க்கன்), 11. **अश्रुते - च** - (தான்) கேட்கா ததும் (பார்க்காததும்) ஆன, **ग्रन्थे** - கிரந்தத்தின்மீது, **व्याख्याता** - உரை செய்பவன் (மூர்க்கன்), 12. **प्रत्यक्ष - अर्थे अपि** - (எல்லோருக்கும்) பிரசித்த மான வார்த்தையி லும், **अपह्नवी** - மறைப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 9. கடன் வாங்கி, வீடு முதலியன வாங்குபவன். 10. கிழவ ஞகிக் கந்நிகையோடு விவாஹம் செய்பவன். 11. தான் பார்க்காததும், கேட்காதது மான கிரந்தத்தின் மீது உரை செய் பவன். 12. எல்லாருக்கும் பிரசித்த மான வார்த்தையிலும் மறைப் பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. **(4)**

चपलापतिरीर्ष्यालुः शक्तशत्रुरशङ्कित ।
दत्वा धनान्यनुशयी स्वकाव्यहठपाठकः ॥ (५)

(இ-ள்.) 13. **चपला - पतिः** - வியபிசாரிணீ ஸ்திரீயின் கணவ ஞக இருந்து கொண்டு, **ईर्ष्यालुः** - அந்யனிடத்து (ஈர்ஷை) பொருமை வைப்பவன் (மூர்க்கன்), 14. **शक्त शत्रुः** - பிரபல சத்துருவினிடத்து நின்றும், **अशङ्कितः** - பய மின்றி இருப்பவன் (மூர்க்கன்), 15. **धनानि** - தநங்களை, **दत्वा** - கொடுத்து, **अनुशायी** — பச்சாத்தாபப்படுவோன் (மூர்க்கன்), 16. **स्व** - தான் செய்த, **काव्य** - காவ்யத் தினை, **हठ** - ஹட மாக, **पाटकः** - படிப்பிப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 13. தான் வியபிசாரிணி ஸ்திரியின் பதியாக இருந்து கொண்டு, அந்நியனிடத்து ஈர்ஷை வைப்பவன். 14. பிரபல சத்துருவி னிடத்து நின்றும் பய மின்றி யிருப்பவன். 15. தநங்களைக் கொடுத்துப் பின் பச்சாத்தாபப்படுவோன். 16. தான் செய்த காவ்யத்தினை ஹட மாகப் படிப்பிப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (5)

लाभकाले कलहकृन्मन्युमान् भोजन क्षणे ।
अप्रस्तावे पटुर्वक्ता प्रस्तावे मौनकारकः ॥ (௬)

(இ-ள்.) 17. **लाभ - काले** - லாப சமயத்தில், **कलह - कृत्** - தகராறு சண்டை செய்பவன் (மூர்க்கன்), 18. **भोजन - क्षणे** - போஜந சமயத்தில், **मन्युमान्** - குரோதம் செய்பவன் (மூர்க்கன்), 19. **अप्रस्तावे** - பிரசங்கம் இன்றிய சமயத்தில் - **पटुः** - அதிக மாக, **वक्ता** - பேசுபவன் (மூர்க்கன்), 20. **प्रस्तावे** - கூற வேண்டிய சமயத்தில், **मौनकारकः** - மௌந மாக இருப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 17. லாப சமயத்தில் தகராறு சண்டை செய்பவன். 18. போஜந சமயத்தில் குரோதம் செய்பவன். 19. தான் கூற வேண்டிய சமய மல்லாத காலத்தில் அதிக மாகப் பேசுபவன். 20. தான் கூற வேண்டிய சமயத்தில் மௌநம் செய்து கொண்டிருப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (6)

कीर्णार्थः स्थूल लोभेन लोकोक्ति क्लिष्ट संस्कृतः ।
पुत्राधीने धने दीनः पत्नीपक्षेर्थयाचकः ॥ (௭)

(இ-ள்.) 21. **स्थूल - लोभेन** - பெரிய (லாபம் கிடைக்க வேண்டும் என்னும்) லோபத்தினால், **कीर्ण - अर्थः** - தநத்

தினை (ஒன்று சேர்க்க முடியாத இடத்தில்) இறைத்து வைப்பவன் (மூர்க்கன்), 22. **लोक - उक्ति** - லோகத்தவர்களோடு பேசும் சமயதில், **क्लिष्ट - संस्कृतः** - கடிந சம்ஸ்கிருதத்தில் பேசுபவன் (மூர்க்கன்), 23. **धने** - (தனது) திரவியத்தினை, **पुत्र - अधीने** - புத்திரனிடத்தில் கொடுத்து விட்டு, **दीनः** - (தான்) ஏழையாகி விடுபவன் (மூர்க்கன்), 24. **पत्नी - पक्षेः** - (தனது) ஸ்திரீயின் வேலைக்காரனிடத்தில், **अर्थ - याचकः** - திரவிய யாசகம் செய்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 21. பெரிய லாபம் கிடைக்க வேண்டும் என்னும் லோபத்தினால் தநத்தினை ஒன்று சேர்க்க முடியாத இடத்தில் இறைத்து வைப்பவன். 22. லோகத்தவர்களோடு பேசும் சமயத்தில் கடிந சம்ஸ்கிருதத்தில் பேசுகிறவன். 23. தனது திரவியத்தினைப் புத்திரனிடத்தில் கொடுத்துவிட்டுத் தான் ஏழையாகி விடுபவன். 24. தனது ஸ்திரீயின் வேலைக்காரனிடத்தில் திரவிய யாசகம் செய்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (7)

भार्याखेदाद्धि हा कर्त्ता पुत्रकोपात्तदन्तकृत् ।
कामुकस्पर्द्धया दाता गर्ववान् मार्गणोक्तिभिः ॥ (८)

(இ-ள்.) 25. **भार्या - खेदाद् - हि** - (தனது) ஸ்திரீயின் துக்கத்தினால், **हा - कर्त्ता** - ஹா ஹா என்று செய்பவன் (மூர்க்கன்), 26. **पुत्र कोपात्** - புத்திரனிடத்துக் கோபம் செய்வதால், **तत्** - அவனை (புத்திரனை), **अन्त - कृत्** - வதம் செய்பவன் (மூர்க்கன்), 27. **कामुक - स्पर्द्धया** - காமுக புருஷர்களுடைய பொறாமையினால், **दाता** - (வேசி முதலியோருக்குத் தநத்தினை) கொடுப்பவன் (மூர்க்கன்,)

28. मार्गण - उक्तिभिः - யாசகன் (வாக்கு) சாமர்த்தியங்களால், गर्ववान् - கெர்வ முடையவ னுகுதல் (மூர்க்கன்).

(கருத்து) 25. தனது ஸ்திரீயின் துக்கத்தினுல் ஹா! ஹா! என்பவன். 26. புத்திர னிடத்து வைத்த கோபத்தினுல், அவனை வதம் செய்பவன். 27. காமுக புருஷர்க ளுடைய வீரியப் பேச்சினுல் வேசி முதலியோருக்குத் தநத்தினைக் கொடுப்பவன். 28. யாசகன், வாக்கின் சாமர்த்தியங்களால் கெர்வ முடையவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (8)

धीदर्पान्न हितश्रोता कुलोत्सेकादसेवकः ।
त्यक्त्वार्थान्दुर्लभान्कामी रोगी पथ्यपराङ्मुखः ॥ (९)

(இ-ள்.) 29. धी - दर्पात् - (தனது) புத்தியினது தர்ப்ப (கர்வ)த்தினுல், हित - श्रोता - न - (தனக்கு) ஹித மான வார்த்தைகளைக் கேட்காதவன் (மூர்க்கன்), 30. कुल - उत्सेकात् - (தனது) உயர்ந்த குலத்தின் கெர்வத்தினுல், असेवकः - சேவகம் செய்யாதிருப்பவன் (மூர்க்கன்), 31. दुर्लभान् - (முதலில்) கிடைக்காத, अर्थान् - வஸ்துக்களை, त्यक्त्वा - விட்டு விட்டு, कामी - (மீண்டும் அவற்றினை) விரும்புபவன் (மூர்க்கன்), 32. रोगी - வியாதி யுடையவ னுக இருந்து கொண்டு, पथ्य - पराक् - मुखः - பத்தியத்தில் பராக் முகமா யிருப்பவன் (மூர்க்கன்.)

(கருத்து) 29. தனது புத்தியின் தர்பத்தினுல் தனக்கு ஹித மான வார்த்தைகளைக் கேட்காதவன். 30. தனது உயர்ந்த குலத்தின் கெர்வத்தினுல் சேவகம் செய்யாதிருப்பவன். 31. முதலில் கிடைக்காத வஸ்துக்களை விட்டு விட்டு, மீண்டும் அவற்றினை

விரும்புபவன். 32. வியாதி யுடையவனாக இருந்து கொண்டு பத்தியத்தில் பராக் (வெளி) முகமா யிருப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (9)

लुब्धे भूभुजि लाभार्थी नीरसे गुणविक्रयी ।
कायस्थे स्नेहबद्धाशः क्रूरे मन्त्रिणि निर्भयः ॥ (१०)

(இ-ள்.) 33. **लुब्धे** - லோப முடைய, **भू भुजि** - ராஜாவினிடத்தில், **लाभ - अर्थि** - (தனது) லாபத்தினை விரும்புபவன் (மூர்க்கன்), 34. **नीरसे** - தள்ளப்பட்டவ (மூர்க்க) னிடத்தில், **गुण - विक्रयी** - தனது குணத்தினைக் காண்பிப்பவன் (மூர்க்கன்), 35. **कायस्थे** - க்ஷத்திரியனுக்கும், சூத்திர ஸ்திரீக்கும், பிறந்தவ (அரசனது வேலைக்கார) னிடத்தில் - **स्नेह - बद्ध - आशः** - (உண்டாம்) சிநேகத்தில் விசுவாசம் வைப்பவன் (மூர்க்கன்), 36. **क्रूरे** — துஷ்ட, **मन्त्रिणि** - மந்திரியி னிடத்தில், **निर्भयः** - பயம் இன்றி யிருப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 33. லோப முடைய ராஜாவி னிடத்தில்நின்றும் தனது லாபத்தினை விரும்புபவன். 34. மூர்க்கனிடத்தில் தனது குணத்தினைக் காண்பிப்பவன். 35. அரசனது வேலைக்காரனிடத்தில் உண்டாம் சிநேகத்தில் விசுவாசம் வைப்பவன். 36. துஷ்ட மந்திரியி னிடத்தில் பய மின்றி யிருப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (10)

कृतघ्ने प्रतिकार्यार्थी न्यायार्थी दुष्टशास्तरि ।
स्वस्थो वैद्यक्रियाकांक्षी दत्त्वा शुल्कममार्गगः ॥ (११)

(இ-ள்.) 37. **कृतघ्ने** - செய் நன்றி கொன்றவ னிடத்தில், **प्रतिकार्य - अर्थि** - (தனது) நன்மையை விரும்புபவன்

(மூர்க்கன்), 38. दुष्ट - கெட்ட, शास्तरि - ஆகீம் (அதிகாரி) இடத்தினின்றும், न्याय - நியாயம், अर्थि - விரும்புபவன் (மூர்க்கன்), 39. स्वस्थः - வியாதி யின்றியவ னாய் இருந்துகொண்டு, वैद्य - क्रिया - आकांक्षी - வைத்தியனிடத்தில் மருந்து சாப்பிட இச்சிப்பவன் (மூர்க்கன்), 40. शुल्कम् - (சாமானுக்கு) சுங்கன், दत्त्वा - கொடுத்துவிட்டு, अमार्गगः - கெட்ட வழி யாகப் போகிறவன் (மூர்க்கன்).

(கருத்து) 37. செய் நன்றி கொன்றவ னிடத்துத் தனது நன்மையை விரும்புபவன். 38. கெட்ட ஆஹீம் (அதிகாரி) இடத்தினின்றும் நியாயம் விரும்புபவன். 39. வியாதி யின்றி, வைத்தியனிடத்து மருந்து சாப்பிட இச்சிப்பவன். 40. சாமானுக்குச் சுங்கன் கொடுத்து விட்டுக் கெட்ட வழி யாகப் போகிறவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (11)

लोभेन स्वजनत्यागी वाचा मित्रविरागकृत् ।
लाभकाले कृतालस्यो महद्भिः कलहप्रियः ॥ (१२)

(இ-ள்.) 41. लोभेन - லோபத்தினால், स्वजन - தனது (அண்ணன் தம்பி முதலிய) பந்துக்களை, त्यागी - விட்டு விடுபவன் (மூர்க்கன்), 42. वाचा - வாக்கினால், मित्र - विराग कृत् - மித்திரனது மநதில் வைராக்யம் வரும்படி செய்பவன் (மூர்க்கன்), 43. लाभ - काले - லாப சமயத்தில், कृत - आलस्यः - சோம்பலா யிருப்பவன் (மூர்க்கன்), 44. महद्भिः - * பெரியோர்களோடு, कलह - प्रियः - கலகம் செய்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 41. லோபத்தினால் தனது அண்ணன் தம்பி முதலிய பந்துக்களை விட்டு விடுபவன். 42. வாக்கினால் மித்திரனது

மனதை அசையாதிருக் (விராக முண்டா) கும்படி செய்பவன். 43. லாப சமயத்தில் சோம்பலா யிருப்பவன். 44. பெரியோர்களோடு கலஹம் செய்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (12)

* திருக் குறள் 90-வது அதிகாரம்.

பெரியாரைப் பிழையாமை.

1 ஆற்றுவா ராற்ற லிகழாமை - போற்றுவார்,
போற்றலு ளெல்லாந் தலை.

2 பெரியாரைப் பேணா தொழுகிற் - பெரியாரால்,
பேரா விடும்பை தரும்.

3 கெடல் வேண்டிற் கேளாது செய்க - அடல்வேண்டின்,
ஆற்று பவர்கணி ழுக்கு.

4 கூற்றத்தைக் கையால் விளித்தற்றா - லாற்றுவார்க்,
காற்றாதா ரின்னா செயல்.

5 யாண்டுச்சென் றியாண்டு முளராகார் - வெந்துப்பின்,
வேந்து செறப்பட் டவர்.

6 எரியாற் சுடப்படினு முய்வுண்டா - முய்யார்,
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

7 வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு - மென்னும்,
தகைமாண்ட தக்கார்ச் செறின்.

8 குன்றன்னார் குன்ற மதிப்பிற் - குடியோடு,
நின்றன்னார் மாய்வர்நி லத்து.

9 எந்திய கொள்கையார் சீறினிடை - முரிந்து,
வேந்தனும் வேந்துகெ டும்.

10 இறந்தமைந்த சார்புடைய ராயினு - முய்யார்,
சிறந்தமைந்த சீரார் செறின்.

राज्यार्थी गणकस्योक्तौ मूर्खमन्त्रे कृतादरः ।
शूरो दुर्बलबाधायां दृष्टदोषाङ्गनारतिः ॥ (१३)

(இ-ள்.) 45. गणकस्य - ஜோதிஷ னுடைய, उक्तौ - வசநத்தில் (பிரியம் வைத்து), राज्य - अर्थी - ராஜ்யம் கிடைக்கும் என்னும் ஆசை யுடையவன் (மூர்க்கன்), 46. मूर्ख - मन्त्रे மூர்க்கனது மந்திரத்தில், कृत - आदरः - ஆதரவு செய்பவன் (மூர்க்கன்), 47. दुर्बल - बाधायां - பல மின்றியவனுக்குத் துக்கம் கொடுப்பதில், शूरः - வீரத்தன்மையைக் காண்பிப்பவன் (மூர்க்கன்), 48. दृष्ट - दोष - अङ्गना - रतिः - தோஷத்தினை அறிந்த ஸ்திரீயினிடத்தில் பிரியம் வைப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 45. ஜோதிஷ னுடைய வசநத்தில் பிரியம் வைத்து ராஜ்யம் கிடைக்கும் என்னும் ஆசை யுடையவன். 46. மூர்க்கனது மந்திரத்தில் ஆதரவு செய்பவன். 47. பல மின்றியவனுக்குத் துக்கம் கொடுப்பதில் வீரத் தன்மையைக் காண்பிப்பவன். 48. *தோஷத்தினை அறிந்த ஸ்திரீயினிடத்தில் பிரியம் வைப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (13)

திருக் குறள் 31-வது அதிகாரம்.

வெகுளாமை.

1 செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் - அல்லிடத்துக்,
காக்கினென் காவாக்கா லென்.

क्षणरागी गुणाभ्यासे संजये न कृतव्ययः ।
नृपानुकारी मानेन जने राजादि निन्दकः ॥ (१४)

(இ-ள்.) 49. गुण - अभ्यासे - வித்யா அப்யாசத்தில், क्षणरागी - க்ஷண காலம் மந விருப்புடையவன் (மூர்க்கன்), 50. संजये - (தநத்தின்) நல்ல க்ஷேமிப்பில், न - कृत - व्ययः - செலவு செய்யாதவன் (மூர்க்கன்), 51. मानेन - அபிமாநத்தினுல், नृप - अनुकारी - அரசனைப் போல் நடிப்பவன் (மூர்க்கன்), 52. जने - எல்லா ருடைய முந்நிலையில், राज - आदि - निन्दकः - அரசர் முதலியோரை நிந்திப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 49. வித்யா அப்யாசத்தில் க்ஷண காலம் மநம் செலுத்துபவன். 50. சம்பாதித்து வைத்திருக்கும் திரவியத்தில் செலவு செய்யாதவன். 51. அபிமாநத்தினுல் அரசனைப் போல் நடித்தல் செய்பவன். 52. எல்லா ருடைய முந்நிலையில் அரசர் முதலியோரை நிந்திப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (14)

दुःखे दर्शितदैन्यार्तिः सुखे विस्मृतदुर्गतिः ।
बहुव्ययोल्परक्षायै परीक्षायै विषाशनः ॥ (१५)

(இ-ள்.) 53. दुःखे - துக்கத்தில், दर्शित - दैन्य - अर्तिः - அதிக ஏழ்மையைக் காட்டுபவன் (மூர்க்கன்), 54. सुखे - சுகத்தில், विस्मृत - दुर्गतिः - (தனது முன்) ஆபத்தினை மறந்து விடுபவன் (மூர்க்கன்), 55. अल्प - रक्षायै - அல்ப (தநத்தினை) ரக்ஷிப்பதன் பொருட்டு, बहु - व्ययः - அதிகச் செலவு செய்பவன் (மூர்க்கன்), 56. परीक्षायै - (விஷத்தின்) பரீக்ஷையின் பொருட்டு, विष - अशनः - விஷத்தைச் சாப்பிடுபவன் (மூர்க்கன்).

(கருத்து) 53. துக்கத்தில் அதிக ஏழ்மையைக் காட்டுபவன். 54. சுகத்தில் தனது முன் ஆபத்தினை மறந்து விடுபவன். 55.

சொற்ப தநத்தினை இரக்ஷிப்பதன் பொருட்டு அதிகச் செலவு செய்பவன். 56. (விஷத்தின்) பரீக்ஷையின் பொருட்டு விஷத்தைச் சாப்பிடுபவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (15)

दग्धार्थो धातुवादेन रसायनरसः क्षयी ।
आत्मसंभावनोत्तब्धः क्रोधादात्मार्थनाशकः ॥ (१६)

(இ-ள்.) 57. धातु - वादेन - ரஸ வாதத்தினால், दग्ध - अर्थः - (தனது) திரவியத்தினை புகை யாக்குபவன் (மூர்க்கன்), 58. क्षयी - க்ஷய ரோக முடையவனாக இருந்து கொண்டு, रसायन - रसः - ரஸாயந மருந்தினால் வியாதியற்றவனாக இச்சிப்பவன் (மூர்க்கன்). 59. आत्म संभावना - उत्तब्धः - தனது அபிமாநத்தினால், கொர்வித்தி (கொதிக்கப்பட்டி)ருப்பவன் (மூர்க்கன்.), 60. क्रोधाद् - குரோதத்தினால், आत्म - अर्थ - नाशकः - தனது அபிப்பிராயத்தினைக் கெடுப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 57. ரஸ வாதத்தினால் தனது திரவியத்தினைப் புகை யாக்குபவன். 58. க்ஷய ரோக முடையவனாக இருந்து கொண்டு ரஸாயந மருந்தினால் வியாதி யற்றவனாக இச்சிப்பவன். 59. தனது அபிமாநத்தினால் கொதிக்கப்பட்டிருப்பவன். 60. குரோதத்தினால் தனது அபிப்பிராயத்தினைக் கெடுப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (16)

नित्यं निष्फलसंचारी युद्धप्रेक्षी शराहतः ।
शयी शक्तविरोधेन क्रोधादात्मवधोद्यतः ॥ (१७)

(இ-ள்.) 61. नित्यं - சதா, निष्फल - संचारी - விருதாவாக சுற்றிக் கொண்டு திரிபவன் (மூர்க்கன்), 62. शर -

आहतः - பாணத்தினுல் (கரை முதலியன) அடிபட்ட பின்னரும், युद्ध - प्रेक्षी - யுத்தத்தின் வேடிக்கை பார்ப்பவன் (மூர்க்கன்), 63. शक्त विरोधेन - சமர்த்தனேடு விரோதம் செய்து கொண்டு, शयी - (பயம் இன்றித்) தூங்குபவன் (மூர்க்கன்), 64. क्रोधात् - குரோதத்தினுல், आत्म - वध - उद्यतः - தன்னைக் கொலை செய்து கொள்ளுபவன் (மூர்க்கன்).

(கருத்து) 61. சதா விருதா வாகச் சுற்றிக்கொண்டு திரிபவன். 62. பாணத்தினுல் கரை முதலியன அடிப்பட்ட பின்னரும் யுத்தத்தின் வேடிக்கைப் பார்ப்பவன். 63. சமர்த்தனேடு விரோதம் செய்துகொண்டு, பய மின்றித் தூங்குபவன். 64. குரோதத்தினுல் தன்னைக் கொலை செய்து கொள்ளுபவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (17)

पण्डितोस्मीति वाचालः सुभटोस्मीति निर्भयः ।
उद्वेजनोऽतिस्तुतिभि र्मर्मभेदी ऋजूक्तिभिः ॥ (१८)

(இ-ள்.) 65. पण्डितः - अस्मि - इति - (தன்னைப்) பண்டித ஞக மதித்து, वाचालः அதிக மாகப் பேசுபவன் (மூர்க்கன்), 66. सुभटः - अस्मि - इति - தன்னைப் (போர் வீர ஞக) நினைத்துக்கொண்டு, निर्भयः - பய மின்றியிருப்பவன் (மூர்க்கன்), 67. अतिस्तुतिभिः - அதிக ஸ்தோத்திரங்களினுல் (மிகப் பெரி தாகச் செய்து), उद्वेजनः - (பிறரை இழுத்தல் வாயிலாய்த்) துன்பம் செய்பவன் (மூர்க்கன்), 68. ऋजु - उक्तिभिः - நேர் வார்த்தைகளினுல், मर्म - भेदी - (அந்யரது மநத்திற்குத்) துக்கம் கொடுப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 65. தான் பண்டிதனாக இருக்கின்றோம் என மதித்து அதிக மாகப் பேசுபவன். 66. தன்னைப் பெரி தாக நினைத் துக் கொண்டு பய மின்றி யிருப்பவன். 67. அதிக ஸ்தோத்திரங் களினால் மிகப் பெரி தாகச் செய்து இழுப்பவன். 68. நேர் வார்த் தைகளினால் அர்யாது மநதிற்குத் துக்கம் கொடுப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (18)

दरिद्रहस्तन्यस्तार्थः संदिग्धेर्थे कृतव्ययः ।
स्वव्यये लेखकोद्वेगी दैवाशात्यक्तपौरुषः ॥ (१९)

(இ-ள்.) 69. दरिद्र - हस्त - न्यस्त - अर्थः - தரித்திரன் கையில் (தன் னுடைய) திரவிய இருப்பைக் கொடுத்து வைப்பவன் (மூர்க்கன்), 70. संदिग्ध - अर्थे - சந்தேஹ மான வேலையில், कृत - व्ययः - செலவு செய்பவன் (மூர்க் கன்), 71. स्व - व्यये - தன் னுடைய செலவில், लेखक - उद्वेगी - எழுதிய பின்னரும் பயப்படுபவன் (மூர்க்கன்), 72. दैव - आशा - त्यक्त - पौरुषः - பாக்கியத்தின் வசத்தால் ஆம் என, முயற்சி யின்றி யிருப்பவன் (மூர்க்கன்).

(கருத்து) 69. தரித்திரன் கையில் தன் னுடைய திரவியத் தினைக் கொடுத்து வைப்பவன். 70. சந்தேஹ மான வேலையில் செலவு செய்பவன். 71. தன் னுடைய செலவில் எழுதிப் பார்த்த பின்னரும் பயப்படுபவன். 72. பாக்கியத்தின் வசத்தினா லாம் என முயற்சி யின்றி யிருப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (19)

गोष्ठीरतिर्दरिद्रश्च सेवाविस्मृतभोजनः ।
गुणहीनकुलश्लाघी सभामध्याद्विनिर्गतः ॥ (२०)

(இ-ள்.) 73. दरिद्रः च - தரித்திரனு யிருந்து கொண்டு, गोष्ठी - रतिः - (அநேக மனிதர்கள் இருக்கும்) சபையில் இருப்பதற்கு விருப்பம் வைப்பவன் (மூர்க்கன்), 74. सेवा - विस्मृत - भोजनः - வேலை செய்வதில் போஜநத்தினையும் மறப்பவன் (மூர்க்கன்), 75. गुण - दीन - कुल - श्लाघी - குண மின்றிய குலத்தினைப் பெரி தாக்குபவன் (மூர்க்கன்), 76. सभा - मध्याद् - विनिर्गतः - (பெரிய) சபையின் மத்தியில் (இருந்து தான்) எழுந்து போபவன் (மூர்க்கன்).

(கருத்து) 73. தரித்திர னுக இருந்து கொண்டு அநேக மனிதர்கள் இருக்கும் சபையில் இருப்பதற்கு விருப்பம் வைப்பவன். 74. வேலை செய்வதில் போஜநத்தினையும் மறப்பவன். 75. குண மின்றிய குலத்தினைப் பெரி தாக்குபவன். 76. பெரிய சபையின் மத்தியி லிருந்து தான் எழுந்து போபவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (20)

दूतो विस्मृतसंदेशः प्रकाशे चौर्यकारकः ।
भूरिभोज्यव्यये कीर्तिः श्लाघायै त्यक्तभोजनः ॥ (२१)

(இ-ள்.) 77. दूतः - தூத ன (வக்கீலா)க இருந்து, विस्मृत - संदेशः - (தான்) கூற வேண்டிய வார்த்தையை மறந்து விடுபவன் (மூர்க்கன்), 78. प्रकाशे - பிரகா (வெளிச்)சத்தில், चौर्यकारकः - திருடுபவன் (மூர்க்கன்), 79. भूरि - भोज्य - व्यये - அதிக போஜநம் - அதிகச் செலவில், कीर्तिः - (தன்னைப்) பெரி தாக நினைப்பவன் (மூர்க்கன்), 80. श्लाघायै - (தனது) பெருமையின் பொருட்டு, त्यक्त - भोजनः - போஜநத்தினை விட்டவன் (மூர்க்கன்).

(கருத்து) 77. தூதனு (வக்கிலா)க இருந்து தான் கூற வேண்டிய வார்த்தையை மறந்து விடுபவன். 78. வெளிச்சத்தில் திருடுபவன். 79. அதிக போஜநத்திலும், அதிகச் செலவிலும், தன்னைப் பெரியவனுக நினைப்பவன். 80. தன் பெருமையின் பொருட்டுச் சாப்பாட்டை மறந்தவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (21)

भार्याभयान्निषिद्धार्थी कार्पण्ये न्यस्तदुर्यशः ।
व्यक्तदोषजनश्लाघी गीतगायी खरस्वरः ॥ (२२)

(இ-ள்.) 81. भार्या - भयात् - (தனது) பெண்சாதியின் பயத்தினுல், निषिद्ध - अर्थी - நிஷித்த காரியம் செய்பவன் (மூர்க்கன்), 82. कार्पण्ये - கிருபணத் தன்மையில், न्यस्त - दुर्यशः - (தனது) யஜசை விட்டு நிந்திப்பவன் (மூர்க்கன்), 83. व्यक्त - दोष - जन - श्लाघी - பிரசித்த மான தோஷ முடைய ஜநங்களை உயர்த்திக் கூறுபவன் (மூர்க்கன்), 84. खर - स्वरः - கழுதை (போன்று கெட்ட) ஸ்வர முடையவனு யிருந்து கொண்டு, गीत - गायी - சங்கீதம் பாடுபவன் (மூர்க்கன்).

(கருத்து) 81. தனது பெண்சாதியின் பயத்தினுல் நிஷித்த காரியம் செய்பவன். 82. லோபத்தினுல் தனது யஜசை விட்டு நிந்திப்பவன். 83. பிரசித்த மான தோஷ முடைய ஜநங்களைச் சிலாகிப்பவன். 84. கழுதை (ஸ்வரம் போன்று கெட்ட) ஸ்வர முடையவனுக இருந்து கொண்டு சங்கீதம் பாடுபவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (22)

बह्वयज्वातिरसिको विक्षिप्तश्छद्म चाटुभिः ।
वेश्यासपत्नकलही द्वयोर्मध्ये तृतीयकः ॥ (२३)

(இ-ள்.) 85. बहु - यज्वा - अतिरसिकः - அநேகம் யக்ஞம் செய்பவனாக இருந்து கொண்டு (ஸ்திரீ - காவ்யம் நாடகாதிகளில்) அதிகப் பிரியம் வைப்பவன் (மூர்க்கன்), 86. छद्म चाटुभिः - கபடமுடைய இன்பமான வார்த்தைகளினால், विक्षिप्तः - குழப்பமடைந்தவனாகி விடுபவன் (மூர்க்கன்), 87. वेश्या - सपत्न - कलही - வேசியின் சத்துருவோடு சண்டை செய்விப்பவன் (மூர்க்கன்), 88. द्वयोः - இருவரது, मध्ये - மத்தியில், तृतीयकः - மூன்றாமவனாகுபவன் (மூர்க்கன்).

(கருத்து) 85. அநேகம் யக்ஞம் செய்பவனாக இருந்து கொண்டு ஸ்திரீ காவ்யம் நாடகங்களில் ரஸிப்பவன். 86. கபடமுடைய நல்ல வார்த்தைகளினால் குழப்பமடைந்தவனாகி விடுபவன். 87. வேசியின் சத்துருவோடு சண்டை செய்விப்பவன். 88. இருவரது மத்தியில் மூன்றாமவனாக இருப்பவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (23)

राज्ञः प्रसादे स्थिरधीरन्यायेन विवर्द्धिषुः ।
अर्थहीनेर्थकार्यार्थी जने गुप्तप्रकाशकः ॥ (२४)

(இ-ள்) 89. राज्ञः - ராஜாவினது, प्रसादे - கிருபையில், स्थिर - धीः - (சதா) ஸ்திரம் என்று பக்தி வைப்பவன் (மூர்க்கன்), 90. अन्यायेन - அந்யாயத்தினால், विवर्द्धिषुः - பெரிதாக இச்சை வைப்பவன் (மூர்க்கன்), 91. अर्थ - हीने अर्थ - कार्य - अर्थी - திரவியம் இல்லாதவனிடத்தினின்றும் திரவியத்தினால் சாதிக்கும் காரியத்தினை விரும்புபவன் (மூர்க்கன்), 92. जने - உலகத்தவர்கள் முன்னிலையில், गुप्त - प्रकाशक. - (தனது) ரஹஸ்ய (வார்த்தையினை) வெளிப்படுத்துபவன் (மூர்க்கன்).

(கருத்து) 89. அரசனது கிருபையினைச் சதாஸ்திரமாக அங்கீகரிப்பவன். 90. அந்யாயத்தினல் பெரிதாக இச்சிப்பவன். 91. திரவியம் இல்லாதவனிடத்தினின்றும் திரவியத்தினல் சாதிக்கும் காரியத்தினை விரும்புபவன். 92. உலகத்தவர்கள் முன்னிலையில் தன்னுடைய ரஹஸ்ய வார்த்தைகளை வெளிப்படுத்துபவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (24)

अज्ञातप्रतिभूकर्ता हितवादिनि मत्सरी ।
सर्वत्र विश्वस्तमना न लोकव्यवहारवित् ॥ (२५)

(இ-ள்.) 93. **अज्ञात - प्रति - भू - कर्ता** - அறியாத (மனிதனுக்கு) ஜாமீன் கொடுப்பவன் (மூர்க்கன்), 94. **हित - वादिनि** - (தனக்கு) ஹிதம் சொல்பவனிடத்தில், **मत्सरी** - பொறாமை வைப்பவன் (மூர்க்கன்), 95. **सर्वत्र** - எல்லாரிடத்திலும், **विश्वस्त - मना** - விசுவாசம் வைப்பவன் (மூர்க்கன்), 96. **न - लोक - व्यवहार वित्** - லோக வியவஹாரத்தினை உணராதவன் (மூர்க்கன்.)

(கருத்து) 93. அறியாத மநிதனுக்கு ஜாமீன் கொடுப்பவன். 94. தனக்கு ஹிதம் சொல்பவனிடத்தில் பொறாமை செய்பவன். 95. எல்லாரிடத்திலும் விசுவாசம் வைப்பவன். 96. லோக வியவஹாரத்தினை உணராதவன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (25)

भिक्षुकश्चोष्णभोजी च गुरुश्च शिथिलक्रियः ।
कुकर्मण्यपि निर्लज्जः स्यान्मूर्खश्चासहायगः ॥ (२६)

(இ-ள்.) 97. **भिक्षुकः च** - பிக்ஷைக்காரனுக இருந்தும், **उष्ण - भोजी च** - சூடான போஜநத்தில் விருப்பம் வைப்ப

வன் (மூர்க்கன்), 98. गुरुः च - குரு வாக இருந்தும் शिथिल - क्रियः - (கர்ம காண்டக்) கிரியையில் குறை வா யிருப்பவன் (மூர்க்கன்), 99. कु - कर्मणि - अपि - கெட்ட செய்கையிலும், निर् - लज्जः - லஜ்ஜை யற்றவனக, स्यात् இருப்பவன் (மூர்க்கன்), 100. असहाय - गः - च - வேறு ஒருவரது சகாயமும் விரும்பாதவனும், मूर्खः - மூர்க்கன்.

(கருத்து) 97. பிக்ஷைக்காரனுக இருந்தும் சூடான போஜனத்தில் விருப்பம் வைப்பவன். 98. குரு வாக இருந்தும் கர்ம காண்டக் கிரியையை அறியாதவன். 99. கெட்ட செய்கையிலும் லஜ்ஜை யற்றவனுக இருப்பவன். 100. வேறு ஒருவரது சகாயமும் விரும்பாதவனும் மூர்க்கன் என்னும் இவர்கள் மூர்க்கர் என அறிக. (26)

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள் மொழி பெயர்த்தது.

॥ इति मूर्खशतकं समाप्तम् ॥

மூர்க்க சதகம் முற்றுப் பெற்றது.

1—8—1944. பழநி யப்ப நகர்.

26. பக்தி(வைராக்ய)சதகம் - பத வுரை-பொழிப்புரை. 1—8. 27. சீடாசாரம்-பால போதினி உரை. 0—8
28. வைராக்ய தீபம் - பத உரை, பொழிப் புரை. 0—8
29. விவேக சூடாமணி - அஞ்ஞ வதைப் பாணி கவி. 1—0
30. ஸ்தோத்திர ரச மஞ்சரி கவி (160) 0—4
31. கீதாத் திரயம் கவி (பகவற் கீதை ஈசுவர கீதை பிரம்ம கீதை). 1—4
32. கைவல்ய நவநீதம் கவி (288) 0—9. 33. வேதாந்த சாஸ்திர ரத்நாவலி (9 சேர்ந்தது) 3—0

அச் சாக வேண்டியன.

1. யுக்திப் பிரகாசம் வசநம். ஹிந்தி மொழி பெயர்ப்பு.
2. பேத திக்காரம் - சத் கிரியை உரை வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
3. பிரபோத சுதாகரம் - வேதாந்தம் பத வுரை. சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
4. விவேக சூடாமணி - வேதாந்தம் பத வுரை. சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
5. சித்தாந்த லேச சங்கிரகம், வசநம். (56 மத விசாரம்) சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
6. தர்க்க சங்கிரகம் - தீபிகை உரை. (தர்க்கம்) சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
7. சப்த பதார்த்தி - வசநம். (தர்க்கம்) சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
8. காணாத சித்தாந்த சந்திரிகை வசநம். (தர்க்கம்) சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
9. கணேச கவசம் - பத வுரை. சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 10. கணேச கவசம் தமிழ்க் கவி உரை.
11. நாநா ஜீவ வாதக் கட்டளை. சத்தியார்த்தப் பிரகாசிகை உரை.
12. சசி வந்ந போதம் - பதார்த்த பாஸ்கரன் உரை. 13. வேதாந்த சூடாமணி - சந்தோஷ தாயினி உரை.
14. சங்கர விஜய விலாசம் வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
15. கைவல்ய நவநீதம் - அருணசல ஞாந தேசிகர், பத சார உரை. 16. சமாதி விதி வசநம்.
17. வீர சேகர ஞாந தேசிக சரிதம், கவி 1500. 18. சந்யாச விதி வசநம்.
19. சிவ சங்காரவதாரம் சுலோகம் உரை. 20. காசிகாநந்த விஜயம் வசநம்.
21. கீதா சாரத் தாலாட்டு, குறிப்பு உரை. 22. பட்டிநத்தார் பாடல் உரை.
23. ஸ்திரீ புருஷ ஜநந மரண ரஹஸ்யம், வசநம். 24. மகாத்ம சரிதாமிருதம் வசநம்.

உ சிவமயம்.

இராம நாத புரம் ஜில்லா, திருப் பூ வணம் வேதாந்த மடம், ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள் இயற்றியன — பதிப்பித்தன.

1.	வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷா வசநம். ஹிந்தி மொழி பெயர்ப்பு. ரூ.	2—8
2.	விசார சாகரம் வசநம். ஹிந்தி மொழி பெயர்ப்பு.	2—4
3.	வியாச தாத்பர்ய நிர்ணயம் வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	0—8
4.	வேதாந்த சித்தாந்த முக்தாவலி வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	0—8
5.	நைஷ்க் கர்ம்ய சித்தி வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	0—8
6.	வேதாந்த பரிபாஷை வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	0—7
7.	ஸ்வாராஜ்ய சித்தி வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	0—4
8.	வேதாந்த சஞ்ஞா வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	0—2
9.	ஹரி மீடே - ஹரி தத்வ முக்தாவலி வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	0–12
10.	மண்டல பிராஹ்மண உபநிஷத்-ராஜ யோக பாஷ்யம் வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	0—4
11.	ஈசாவாஸ்ய உபநிஷத்-சங்கர பாஷ்யம் வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	0—4
12.	கதா சரித் சாகரம் வசநம். சம் ஸ்கிருத மொழி பெயர்ப்பு கதை.	2—4
13.	பகவற் கீதை 15-வது அத்தியாயம். சம்ஸ்கிருதம், தமிழ்க் கவி உரை. [தமிழ்.	
14.	மூர்க்க சதகம் - சம்ஸ்கிருதம் பத வுரை. நிர்க்குண அஷ்டோத்தர சத நாமாவளி சம்ஸ்கிருதம்	0—8
15.	வட நாட்டில், ஹரித் துவாரக் கும்ப மேளாவும், தென் னாட்டில் சாதுக்கள் மேளாவும் வசநம்.	0—2
16.	அத்வைதிகட்கும், திட்டாநத்தி லிருப்பவர்கட்கும் ஓர் அறிக்கை வசநம்.	0—2
17.	சாது ச விழாக் கூட்ட வைபவம் வசநம்.	0—2
18.	மடங்களின் உற்பத்தியும், தற் போது உள்ள நிலைமையும் வசநம்.	0—2
19.	திருக் களர் வீர சேகர ஞாந தேசிகர் சரிதம் வசநம்.	1—0
20.	தாந்திரீக த்வைத சைவ கண்டநம் வசநம். (சூட்டுக் கோல்-கட்டாரி-புச்சம்).	1—0
21.	பக்தி (வைராக்ய) சதகத் தோத்திரம் - தோத்திரப் பிரகாசம் என்னும் பத உரை.	0—3
22.	கீதா ராத் தாலாட்டு - லகு சந்திரிகை உரை 2—0. 23. பஞ்ச தசி கவி (800)	0–10
24.	- மநப் ரகாசிநி உரை 2—0. 25. வாசிட்டம் (கவி 2055)	2—4